உ

# செந்தமிழ்.

தொகுதி உக.] ருதிரோற்காரி-ஷு ஆவணிமீ [பகுதி கo
Vol-XXI. August-September-1923. No. 10.

## பலகவித்திரட்டு.

(சoச-ம் பக்கத்தொடர்ச்சி.)

தருமபுர ஆதீனத்திலிருக்கிறசமாதியை யொருசோழராசன் வரும் வழியிற்கண்டு கோயிலெனக்கும்பிட்டவுடன் கோயிலன்றெனத்தெரிந்து சமாதியை இடித்துவிடச்சொல்ல, அப்படியே வேலைக்காரர்வந்து இடிக்கும்போது, அப்போதிருந்த தேசிகசுவாமிகள் பின்வரும் வெண்பாவைக் கூற வேலைக்காரர் இடித்தவிடத்திலே இரத்தம்புறப்படக்கண்டு இடிப்பதைவிட்டோடி அரசனிடம் தெரிவிக்க, அரசன் பயந்துவந்து பணிந்து சிலகிராமங்களைத் தானஞ்செய்தானென்பர். தேசிகசுவாமிகள் கூறிய கவி வருமாறு:—

ஈசன்பலவீனனென்றக்காலாலயத்தின்
மோசம்வருமென்றுமொழியலாம்—ஈசன்றான்
ஆக்குவதுஞ்செய்தேயழிப்பதுவுஞ்செய்தக்கா
ளேக்குவதென்னும்பிறரைநொந்து.

தருமபுர ஆதீனத்திலிருந்த ஒரு சின்னப்பண்டாரசந்நிதி தம் வயலுக்குத் தண்ணீர்விடாமையால் வருத்தமுற்றுக் கூறியவெண்பா.—

சைவசமயஞ்சமயமெனிலச்சமயத்
தெய்வம்பிறைசூடுந்தேவெனி—லவ்வரைவென்
றானந்தவெள்ளத்தழுந்துவதேமுத்தியெனில்
வானங்காள்பெய்வீர்மழை.

இவ்வெண்பாவைக் கூறியவுடனே அவ்வயலுக்குமாத்திரம் மழை பெய்தது. அவ்வயல் இப்பொழுது திருநெல்வேலியிற் புகைவண்டிநிலய மாக இருக்கிறது.

திருவாவடுதுறையாதீனத்திற் றசகாரியஞ்செய்த தக்ஷிணாமூர்த்தி தேசிகரியற்றிய வெண்பா:—

சலக்குழியின் மிக்கசகதியிலேயங்கச்
சலக்குழியையின்பமெனச்சார்ந்தச்—சலக்குழியைக்
காமித்தார் தங்களுக்குக்காட்டாமனல்லறிவைச்
சேமித்தானன்றேசிவன்.

தடிக்கம்பு கையிலிருப்பதனாலாகும் பயன் கூறியகவி:—

முள்ளரிக்குநாயடிக்குமோடுபள்ளந்தான்றெரிக்கும்
கள்ளருக்குமெண்ணங்கலக்குமே—மெள்ள
வடியெடுக்கமாட்டார்க்குமாதாரமாகுந்
தடிகையிலேயிருக்கிற்றான்.

உண்ணுமிலைக்குக் கூறியகவி:—

வாழையிலைபுன்னைவளர்தேக்குமாப்பலாத்
தாழையிலையூணியிலைதாமாகும்—வாழையிலை
தண்டுரித்தாலாகாது தார்வேந்தர்க்காணலும்
பண்டுரைத்தார் நூலின்பயன்,

வீட்டிற் சுவர்பிளக்கிற் பலனறியக் கூறியகவி:—

குடதிசைதனத்தைப்பண்ணுங்குணதிசைபிளக்கினசம்
வடதிசைபிளக்கினன்மைவலியதோர்சாவுதெற்கா
நடலையிற்படுத்துமங்கிநவநிதிநிருதிகாட்டு
முடலினைப்பிளக்குமீசனுறுசாவுவடமேற்காமே.

கறையானெழும்புவதா லுண்டாம்பயன் கூறியகவி:—

செஞ்சிதலுறிற்கீழ்த்தொழுவெனிற்காலிசேதமாம க்களீச்சான்
மஞ்சமதின்கீழ்வியாதியாங்கோயிலூ ணிமன்றமாதவத்தோர்
மிஞ்சிவாழ்பள்ளியதிலெழுமாகின்மிகவுமே டுகேடாகும்
பஞ்சின்மெல்லடியாய்நடுமனையெழுமேற்படுமெரியெனப்பகர்ந்தனரே.

பல்லிவிழ்பலன்கூறிய கவிகள்:–

உச்சியிற்சிலுகுபிடரியின்மரணமுயர்நெற்றிபயம்புருவத்தின்
மெய்ச்சிறைகலகம்வலச்செவிசெல்வமிடச்செவிலாபமீக்கண்ணே
லச்சமில்சுகமோதாடியேற்கூறைவலக்கணேலவனியாள்பவனுஞ்
செச்சையாரிடத்தோளிறைபயநாசிசேர்பிணிமேலிதழ்மோசம்.

மோசமில்குக்கிகுமாருக்காகாமொழிவலத்துடைமகவுண்டா
மேசிலாவிடதுதுடை,திரிபோகமிடதுமுன்காலத்தநாச
மாசிலாமார்புபுத்திரனுண்டாமண்ணினிற்றன்முனேல்வதுவை
கோசரவலக்கானிலம்புலஞ்சாருங்கூறியபல்லிவீழ்பலனே.

பாஞ்சாலங்குறிச்சி வித்துவானொருவர் வேற்றூர்க்குப்போயிருந்த போது ஒருவர் உங்கள் ஜமீந்தாரும் இறந்தனரயெனறிழித்துக்கூற அவ்வித்துவான்கூறிய கவி:–

மனுவிறந்தனன்மாந்தாதாதுஞ்சினனவானவர்முடிசாயத்
தனுவளைத்தபோர் முசுகுந்தனறுஞ்சினனறசரதனசமைந்தற்று
னினிதெமக்கெனவிரவியுமதிபமுமிலங்கையிற்புகவிட்ட
புனிதவெஞ்சிலைராமனும்போயினனுரனிபபொன்றுநா

ராக்கன் என்னும் ஒருவனை ஒருவித்துவான் புகழ்ந்து பாட அவன் இந்தக் கற்பனைக்கவியை ஒப்புக்கொள்ளமாட்டேன்; உள்ளதைச்சொன னூற்றருவேனென்றுசொல்ல உடனே வேடிக்கையாக அவ்வித்துவான கூறிய கவி:—

பாக்காவதுகமுகம்பழம்பருப்பாவதுதுவரை
மேற்காவதுகிழக்கேநின்றுபார்த்தாலதுதெரியு
நாற்காதமுமிருகாதமுநடந்தாலறுகாதம்
• ராக்காவுனைக்காத்தேன்ரக்ஷிப்பாயோபக்ஷிப்பாயோ.

பதினெட்டுத் துட்டுக்கொடுத்த முத்துக்குமாரசுவாமிமீது ஒரு புலவர்கூறிய கவி,–

முந்தப்பாட்டுக்குச்சீதக்காதித்துரைமோதிரங்கொடுத்தான்குழி மீதினிற், சந்தப்பாட்டுக்குக்காளத்தியப்பனுஞ்சாப்பமாமணியீநத னனே ரத, பந்தப்பாட்டுக்குஞ்சிட்டுக்கவிதைக்கும்பதினெட்டுத்துட் டுத் தந்

திட்டபாண்டியா, சொந்தப்பாட்டுக்கும்வீட்டுக்குமென்செய்வாய்சொல்லு முத்துக்குமாரசுவாமியே.

திருநெல்வேலிக்குத் தெற்கிலுள்ள ஓமநல்லூர் அநந்தபற்பநாப பிள்ளையிடம் ஒரு புலவர்கூறியகவி:—

குலைவைக்குஞ்செந்நெல்வயனல்லூர்ச்சங்கரமூர்த்திகுமாரமன்னர்
தலைவைக்குங்கிள்ளாக்கையநந்தபற்பநாபாவென்றன்மைகேளாய்
விலைவைக்குங்கடையரிசிவாங்கியுண்ணமுடியாதென்வீட்டிலிப்போ
துலைவைக்கச்சொல்லிவந்தேனெற்கொடுத்தாலரிசிகுத்தியுண்ணலாமே

இதைக்கேட்ட அப்பிரபு புலவர்வீடுநிறைய நெற்கொண்டுகுவிக்கு படி செய்ய அதையறிந்த புலவர் பின்புகூறிய கவி:—

எந்தக்காலமுமநந்தபற்பநாபன்சுகமாயிருக்கவேண்டும்
வந்தக்காலவன்றனக்கேமகத்தானபெருஞ்செல்வம்வரவும்வேண்டும்
பந்தறகால்போலுயர்ந்துபருத்திருக்குமடையர்களைப்பாடிப்பாதி
தந்தக்காலென்னதாரதிருந்தக்காலென்னசொல்லுந்தமிழ்சொல்வீரே.

ஒருபழங் கவி:—

நறைபட்டதொங்கலழகப்பூபதிநாமஞ்சொல்லி
முறையிட்டபோதவன்பாரியெறிந்தமுறத்திருகா
தறுபட்டுவீணையுடைபட்டுநானுமவிடம்விட்டுப்
பறிபட்டுவந்ததென்பாரிமுன்னாட்செய்தபாக்கியமே.

திருவாழிடம்:—

முல்லைநறுமலருடனேபதுமஞ்சங்கமொழிதருவெண்கவரிகுடைமூரியானை
சொல்லரியசவுரியன்பத்தினிப்பெண்மெய்யன்றூயமனைகண்ணாடிகளபச்சேற
வெல்லவருபதாகைபரியாவின்பிட்டம்வேசைமுகமரசர்பதிவிளக்குச்செம்பொ
செல்வவளஞ்சிறந்தோங்குமிடங்கடோறுஞ்செந்திருவாழிடமென்னச்செப்பல
[சே

சத்தாங்கவரிசை:—

பஞ்சலோகம்ரத்நம்பலதானியங்கேத்திர
மிஞ்சுமணிவாகனம்வேய்துகிலே—யஞ்சலென
வைத்தாங்குவந்தகவிவாணருக்குப்பூவேந்தர்
சத்தாங்கஞ்செய்வரிசைதான்.

சந்திரனுக்குத் தேர் கொடி குதிரை சாரதி யுண்டென்பது:—

வெண்குதிரைபத்துவிளங்குமயிலின்றாவி
நண்ணுகொடியாகநாட்டியே—விண்ணுலகிற்
சங்கவண்ணன்றேரூரத்தானிருந்தான்றிங்களுமே
யெங்கொளிப்பேன்மாதேயினி.

சேற்றூர்ச்சமீந்தார் சுந்தரதாசுத்துரைசெய்த பாரதப் பிரசங்கத்தை வியந்து அவர்க்குக் கல்விகறபித்த ஆசிரியரும், ஸம்ஸ்தானவித்துவானுமாகிய இராமசாமிக்கவிராயர்கூறிய கவிகள்:—

சொல்லவரையாதருளுஞ்சுந்தரதாசேந்த்ரசிங்கஞ்சொலும்பிரசங்கம்
வெல்லவரைமீதுமதுப்புயல்பொழிதற்கதிகமெனவிளம்பன்மெய்யே
கொல்லவரைசேதுவரைகுமரிவரையுறைகவிஞர்க்குள்ளிவன்போல்
வல்லவரையாங்களிதுவரையுமறிந்திலமறிந்தோர்வழுத்தலாமே.

தனங்கொடுத்துந்துகில்கொடுத்துஞ்சந்ததமுமற்றவர்வதனம்பாராம
லனங்கொடுத்துந்தன்பிரசங்கமறிந்துமெய்க்கின்றோர்க்கின்றாலென்றெற்கு
கனங்கொடுத்தசுந்தரதாசேந்திரற்கெண்டிருவும்பாற்கடல்போன்மேன்மே
லினங்கொடுக்கத்தவம்பெற்றுள்சீரடிப்போதெப்போதுமிறைஞ்சுவேனே.

அவர்பிரசங்கத்தை வியந்து ஊற்றுமலைச் சமஸ்தானவித்துவான் முத்துவீருப்புலவர்கூறிய கவி:—

அக்காலத்திற்கும்பன்கம்பனருந்தமிழின்
மிக்கானவரென்றுவிள்ளுவார்—இக்காலத்
திந்துமுனந்தாரகைபோலின்றமிழ்க்குக்குன்றுவார்
சுந்தரதாசேந்த்ரதுரைக்கு.

திருவாவடுதுறையாதீனமஹாவித்துவான் தாண்டவராயசுவாமிகள்மீது சென்னையிலிருந்த வித்வான் மஹாலிங்கையர்கூறிய கவி:—

விரிந்தமகராலயத்துமின்னுளுக்கணியாகிமேம்பாடுற்றுப்
பரிந்தசிவயோகியர்வாழ்துறைசையுளாயிருகலையின்பண்பைநன்கு
தெரிந்ததாண்டவராயமாதவசித்தாந்தமுணர்செல்வாநின்னைப்
பிரிந்ததனுன்மணியிழந்தகண்ணதுபோல்வாடுகின்றேன்பேதையேனே.

சேற்றூர்ச்சமஸ்தானவித்துவான் இராமசாமிக்கவிராயர் தமது நிரியாணதசையிற் றம்மைப்பார்க்கவந்த பாண்டித்துரைமீது கூறியகவி :—

முன்பாண்டிப்புரவலனுஞ்சங்கம்வைத்தோர்சாமமதின்முடுக்கிவிட்டான்
இன்பாண்டித்துரையோசங்கப்புலவர்தனிகரெனவிருத்தற்கெண்ணித்
தன்பாண்டிறனைநடத்திப்பொருடேடிக்கொண்டுவந்துதந்துகாத்தே
யென்பாண்டியெனுங்கடவுடிருவருட்செல்வமுமெய்தியிருக்கின்முனே.

[பாண்டிப்புரவலன்—பாண்டியராசன். ஓர்சாமம்—1. ஒருபஞ்சகாலம். 2. ஒருசாமநேரம். தனிகரென—1. தனக்கொப்பாக 2. பொருளுடையரென. தன்பாண்டில்—தனது ஆக்கினைசக்கரம்.]

இதைக்கேட்டபாண்டித்துரை மிகவியந்து, நான்சொல்லுகிற சொல்லைக்கருதாது கருத்தைமாத்திரங்கருதவேண்டுமென்றுசொல்லிக் கொண்டு, "மழைக்காலிருட்டானாலும் மந்திகொம்பிழக்கப்பாயாது" என்றபழமொழிபோலக் கவிராயரவர்கள் நிரியாணதசையிலும் கவிசெய்யும் வல்லமையிற் குறையாதிருக்கின்றார்களென மகிழ்ந்துரைத்தார்கள்.

எட்டையபுரங் கடிகைமுத்துப்புலவர் வெளியேபோயிருந்தபோது ஒருபுலவர் பாடிவந்தபிரபந்தத்தை அங்குள்ளவித்துவான்கள் அரங்கேற்றியதை, வந்துதெரிந்தபின் அப்புலவர் கூறியவெண்பா :—

சிங்கமிருந்துதிரஞ்செலுத்திக்கொண்டுவருஞ்
சங்கமெனுமெட்டபுரந்தன்னிலே—யெங்களுடை
யெட்டாகுமாரெட்டாயானில்லாமற்பயல்க
ளிட்டசட்டமாய்விட்டதே.

சேற்றூர்ச்சமீந்தார் திருக்குற்றாலத்துக்குப்போயிருந்தபோது பாரதப்பிரசங்கஞ்செய்யக்கேட்டுச் சமஸ்தானவித்துவானாகிய இராமசாமிக் கவிராயர்கூறியகவி:—

திடபுருடசிங்கமெங்கள்சுந்தரதாசேந்திரன்முன்செயும்பிரசங்கம்
வடவருவியென்பாதுமேற்போமாசெவிக்கினிக்குமாமுந்நீர்சூழ்
புடவியெங்குந்தொனித்திடுமோபன்னூலையாராய்ந்தபுலவீரென்று
முடலழுக்கையொழிப்பதன்றியகத்தழுக்கையொழித்திடுமோவுரைசெய்வீரே.

[இக்கவி சொல்லிவரும்போது உடலழுக்கையென்றுகூறிப் பின்வருவது சொல்லுமுன்னே அறிந்து ஜமீந்தார் சபாசுஎனக்கூறினர்; அங்ஙனங் கூறியவுடன் அதற்காகமகிழ்ந்து கவிராயர் பின்வருங் கவியைக்கூறினர்.]

முன்னமுபரங்கமன்னன் கவிகேட்டுச்சிரமசைப்புமொழியும்லக்கம்
பொன்னெனச்சொல்லும்புலவீர்சுந்தராதாசேந்திரனைப்போலப்பாவின்
பின்வருங்கற்பனையிஃதென்றறிந்துசபாசென்பதுண்டோபேசுங்காலிம்
மன்னரிருவரிலெவரேதமிழ்த்திறமூற்றுந்தெரிந்தோர்வழுத்துவீரே

[உபரங்கமன்னன் என்றது உடையார்பாளையத்துச்சமீந்தாரை].

அச்சேற்றூர்ச்சமீந்தார் திருக்குற்றாலத்திலிருந்து சேற்றூருக்கு வந்தபோது காணவந்த அக்கவிராயர்கூறியகவி :—

தேவருக்கையுறுதலினுற்றிருவனிறையாயிருக்குஞ்செயலாலென்று
மாவலுடன்சம்பகக்காவலர்வாசமுறவிருக்குமதனுலிந்தப்
பூவிலுயர்சித்ரசங்கம்பொருந்தியதாற்குற்றாலம்போற்சேற்றூரை
நாவலரோடெண்ணியுனைச்சுந்தராதாசேந்த்ரவிங்கோநாங்கண்டோமே.

இதில், திருக்குற்றாலத்தைக்குறிக்கும்போது, தேவருக்கை—தெய்வத்தன்மையுள்ளபலா. திருவனிறையாயிருத்தல்—திருமால் சிவபிரானுயிருத்தல். சம்பகக்காவலர்வாசம்—சண்பகாடவியின் பூவாசனை. சித்திரசங்கம்—சித்திரசபை என்றும், சேற்றூரைக்குறிக்கும்போது, தேவருக்கை—தேவமாருக்கழகு. திருவனிறையாயிருத்தல்—திருவனென்னும் பெயரையுடையான் அரசனுகியிருத்தல். சம்பகக்காவலர்வாசம்—சம்புவாகிய சிவபிரானை அகத்திற்கொண்ட அரசர்கள் இருப்பிடம். சித்திரசங்கம்—ஆச்சரியமுள்ள வித்துவக்கூட்டம், என்றும் பொருள்கொள்க.

பெரியகுளந்தாலுகா இரசக்கநாயக்கனூர்ச்சமீனைச்சார்ந்த ராயப்பன்பட்டி ராயப்பவுடையார்மேல் அக்கவிராயர்கூறியகவி :—

அநந்தபற்பநாபன்மன்றுளாடிமுதற்செல்வரெலாமகத்துமெச்சக்
கனந்திகழக்கொடுத்தவரென்றுரைசெய்வாரவர்தம்மைக்கருதுங்காலைத்
தினங்கவிசொல்வோர்க்குமிகுவாசிகொடுப்பாயுனைப்போற்செய்தாரோவிற்
பனம்பொருந்தராயப்பேந்திரவுடையாயுனையவர்போற்பகரொணுதே,

இக்கவிகேட்டு உடையார் கவிராயருக்கு ஒரு குதிரைகொடுத்து அவருடன் வந்திருந்த அவர் குமாரர் சுப்பிரமணியக்கவிராயர் அப்போது சிறுபிள்ளையாய் நிகண்டுமுதலியனகற்றுக்கொண்டிருந்தமையால் அவரை அப்பாடங்களில் உடையார் பரீக்ஷித்து மெச்சிக் 'குட்டிக்கவிராயர் இந்தக் குட்டிக்குதிரையைப்பெறுக' என்று ஓர் குதிரைக்குட்டி கொடுத்தார். அப்போது ஷ சுப்பிரமணியக்கவிராயர்கூறியவெண்பா :—

குட்டிக்குதிரையினைக்குட்டிக்கவிராய
ரிட்டமுடன்கொள்கவென் றீந்ததனால்-வட்ட
வுலகுபுகழ்ராயப்பாவொன் றல்லவாசி
பலவாகக்கொள்வனினிப்பார்.

[வாசி—குதிரை ; இலாபமுமாம்.]

ஷ இராமசாமிக்கவிராயர் தம் தமயனார் கந்தசாமிக்கவிராயர் பொருளால் முகவூரில் நாயக்கமார்தெருவின் மேல்புறமந்தையில் ஒரு விநாயகர்கோயில் கட்டத்தொடங்கும்போது நாயக்கமாரிற் சிலர் தடுக்க, உடனே ஸ்ரீவில்லிபுத்தூரில், தாசிலதிகாரமும் மேஜிஸ்டிரேட் அதிகாரமும் பெற்றிருந்தசரவணமுத்துப்பிள்ளையிடம் கவிராயர் கூறிய பிரா துக் கவிகள் :—

மன்னவநின்றிருமுகத்தைக்கண்டமடவார்கரத்துவளைபோகாமன்
முன்னமொருதடையிடுவதியற்கையன்றியொருதருமமுடிக்கும்போது
பின்னமுறத்தடையிடுதனின்னதிகாரத்துமுண்டேற்பிறர்யார்காப்பார்
பன்னுதமிழருமையறிசரவணமுத்தேந்திரசம்பனபூமானே.

அரக்கரைவென் றவனெனச்சொல்சரவணமுத்தேந்திரநின்னதிகாரத்தி
லிரக்கமில்லாதவர்களுக்குஞ்செல்வருக்குங்கலகமுண்டாமிதுவல்லாலோர்
வருக்கொருவர்கலகமியற்றுதபடியொடுக்கியதைமறந்துசெய்யுங்
குரக்குமனத்தரையொடுக்கவுத்தரவுகொடுத்துச்சீர்கொள்கநீயே.

[கலகம் கல்லையொத்தமனமென்றும் கல்லாலாகியவீடு என்றும் பொருள்கொள்க.]

பிள்ளையவர்கள் எதற்காகத்தடுத்தார்கள் என்றுகேட்டபோது கவிராயர்கூறியகவி :—

இக்கடவுண்முகந்தூங்கலடிக்கடிநாம்பார்ப்பதனுக்கெட்டாதென்றோ
தக்கநற்சிற்றுண்டிபெருவயிறுநிரம்பாதென்றோசந்தியெல்லா
மிக்கவுந்தன்வாகனத்தானமதகத்தைத்துளைப்பதென்றோவிலக்குதற்கே
யக்கரையுற்றனர்தவஞ்சேர்சரவணமுத்தேந்த்ரமன்னவறைகுவாயே.

இதனைக்கேட்டபிள்ளையவர்கள் உடனே அவர்களைக் கண்டித் தடக்கிக் கோவிலைக் கட்டும்படிசெய்தார்.

யாழ்ப்பாணவடகோவைச் சபாபதிநாவலர் தேவகோட்டையிற் பிரசங்கம் செய்தபோது வித்துவானாகிய வன்றொண்டச்செட்டியாரை மதியாதுரைத்ததுகேட்டு, வேம்பத்தூர்ப் பிச்சுவையர் பின்வருங் கவியைக்கூற உடனே சபை கலைந்துவிட்டது.

நதியோகடலைப்பொருவது நாளுக்குநாட்குறையு
மதியோகதிரவனையொளிமாய்ப்பது மத்தெறிதண்
டதியோமத்திற்குத்தயிரியஞ்சொல்வது தாழ்ந்தசபா
பதியோநம்வன்றொண்டர்முன்பாற்பிரசங்கம்பண்ணுவதே.

பண்டாரமென்னும் பட்டப்பெயருடைய ஒரு தேசிகரும் ஒருசெட்டியாரும் சிநேகமுற்றுத் தலயாத்திரை செய்துவரும்போது பண்டாரத்தின் சுவாமிக்குப் பரிவட்டமில்லாமையாற் செட்டியாரிடங்கேட்கமுடியாமற் பூசைமுடிவிலே பின்வருங் கவியைக் கூறினார்.

நரிவட்டமிடுங்களத்திலந்தகாசுரனைவென்றநம்பாசெம்பொற்
கிரிவட்டத்தனத்துமையாள்பங்காளாவெளியன்மொழிகேளாதென்னே
கரிவட்டத்துரிபுனைந்தகுறையோநஞ்செட்டியார்கையின்மேவும்
பரிவட்டந்தனினினைவோவேணுமென்றாலவர்கிருபைபாலிப்பாரே.

இக் கவியைக்கேட்ட செட்டியார் பூசை முடிவிலே பின்வரும் கவியைக்கூறினார்; பின் னிருவரும் பிரிந்துபோயினர்.

கொத்தாருங்குழலுமையாள்பங்காளாவெளியன்மொழிகொள்ளாதென்னே
அத்தார்தம்மாணையுயரன்னையாணையாண்டார்களாணையெனதையனாணை
பத்தார்களாணையுன்றன்பாதத்தாணைபண்டாரந்தொண்டைகட்டப்பாடிப்பாடிச்
செத்தாலுமெலும்பெலும்பாக்கழிந்திட்டாலுந்தேவாங்கின்னுடைமையொன்றுஞ்
செலவிடேனே.

வடகரைச்சமஸ்தானத்துத் தானாபதி பொன்னம்பலம்பிள்ளை விரோதம் நேரிட்டமையாலே அச்சமஸ்தானத்தை நீங்கித் தென்னாடெல்லாம் அதிகாரஞ் செய்துகொண்டிருந்த தளவாய் அழகப்பமுதலியாரிடஞ்சென்று கூறிய கவி:—

தானாபதியென்றபேர்மாத்திரமென்றமிழருமை
யானாலறிவது நீமாத்திரமெனக்காதரவு
நானாவிதத்திலுங்காணேனுனைமுற்றுநம்பிவந்தேன்
மானாபரா தொண்டைவேந்தா அழகப்பமன்னவனே.

சேற்றூர்ச்சமஸ்தான வித்துவான்களாகிய கந்தசாமிக்கவிராயரும், இராமசாமிக்கவிராயரும் ஷை சமஸ்தானாதிபதியாகிய முத்துசாமித் துரைபேரிற் குறவஞ்சியென்னும் பிரபந்தம்பாடி அரங்கேற்றியவுடன் இருவரையுஞ் சிவிகையில்வைத்து நகர்வலஞ்செய்விக்கும்போது, தானாபதியாயிருந்த சுந்தரமஹாலிங்கம்பிள்ளை சிவிகைசுமக்க, அப்போது இராமசாமிக்கவிராயர் கூறியகவி:—

செய்தாங்குஞ்சேறைத்துறைமுத்துசாமிசிங்கேறமைச்சன்
மெய்தாங்குசொற்சுந்தரமகாலிங்கவிவேகனென்று
மைதாங்குலகிற்பெருங்கீர்த்திதாங்கிடவாணர்சிவி
கைதாங்கிமிக்கனந்தாங்கினனெந்தக்காலத்துமே.

முறையூர் ஜமீந்தார் பழ. சி. சண்முகஞ்செட்டியார்க்கு சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரெழுதிய சீட்டுக்கவி :—

சீர்கொண்டசேறையம்பதியிலுயர்நீதியிற்சிவபத்தியிற்பெருமைசேர்
செல்வன்முத்துச்சாமிதுரையவன்சேயெனத்திகழ்பாரதத்துரையெலாந்
தேர்ந்தசுந்தரதாசுதுரையவன்செம்மலாஞ்சேவகப்பாண்டியனெனச்
செப்புமொழிமாருவரிச்சந்திரன்சீர்செழித்தவிம்மூவருக்குஞ்
சேர்வித்துவான்கவிமழைப்புயலெனப்புலவர்தெரிராமசாமிகவிஞன்
சிறுவர்களினடுவாகவந்திபமுகற்கிளையதேவனும்பூனைந்து
செகமதில்விளங்குநாமெழுதிவிடுபாசுரந்தென்கயிலைகோமுத்தியாச்
சிந்தைகொண்டுற்றன்பருக்கருளவுமைமேவுதிருவுருமறைத்துமனிதப்
பேர்கொண்டவடிவுற்றதேசிகனெனச்சொல்சுப்பிரமணியகுருசாமிதன்
பின்னமசிவாயதேசிகனுதவுகல்வியைப்பெட்பினவ்வாதீனம்வாழ்
பெரியவடியாரேனையோர்கட்குநன்குகற்பிக்கவேண்டுமெனவோதப்
பிறங்குமவ்வாக்கின்படிக்கவணிருந்துபலபேர்க்குமேகற்பித்தனம்
பீடுபெறுமவர்களிற்பலர்கலாசாலையிற்பேசுபண்டிதராயினர்
பின்னரிதுநிற்கமீனாட்சிசொக்கேசரடிபேணியென்றும்பணிகுவோம்
பெறுநன்றியிலர்பிதாசோதரர்களாயினும்பெரிதுள்வெறுத்துவிடுவோம்
பிரியுமா ?கிலமகீதுரைப்பார்கணண்பிலோம்பிங்கலன்போற்செல்வராய்
ஏர்கொண்டிருக்கினுங்கல்வியறிவில்லரேலெள்ளளவுமென்றுமதியோம் [லோ
இயம்புமுன்பின்னுள்ளகவிஞர்போற்பொருள்வேண்டியெவர்மீதுநற்கவிசொ
மின்னுநாங்கற்றநூல்யாவுநம்பாற்கற்பரேவரெனவெண்ணுகின்றே
மினியசிவபத்தியாற்கல்வியானற்குணத்திசைநண்பினுற்றன்னரே.

ரில்லையிங்நாண்மன்னவர்க்குளெனவந்தபாண்டித்துரைதென்மதுரைதன்னில்
ஸ்ரீஇயநான்காஞ்சங்கமதனிற்கலாசாலையினிலெவருமெச்சும்வண்ண
மிருபொருட்சைவநூற்பரிசோதகப்பெயரையீந்துவைத்தானென்றுமே
யிதுவரையுமோரேழுவருடமாயினதவணிருந்துவாழ்கின்றேமுயர்
தார்கொண்டசோலைசூழரிமழந்தனிலிருந்தருளுமீனாட்சிபிள்ளைத்
தமிழெனும்பிரபந்தமதுவொன்றுசெய்தனமதனையரங்கேற்றிவங்தோங்
தயையுடன்றருதலாற்றருமன்மிகுபொறுமையாற்றருமன்மாப்போகமதனாற்
றருமனுவலவர்புகழ்தருமன்மிகுபுண்ணியத்தருமன்பினலுரைக்கத்
தக்கவன்றானென்றுமுறையூரர்போலெத்தலத்தாருமேத்துகின்ற
தகைமையோனெனவணிகர்திலகமாயுறுதலாற்சார்ந்துனைக்காணவங்தோஞ்
சண்முகவசீகரகுணாகரதயாபரசலாபசந்தானவள்ளால்
தகுபுண்ணியம்புகழுனக்கெய்திநிலவித்தழைக்குமுலகுளமட்டுமே.

**கோமுத்தி—ஆவடுதுறை.** பிசி—பொய். பிங்கலன்—குபேரன். **சைவநூற்பரிசோதகர்—** 1. சைவநூற்பரிசை ஓதும் அகத்தையுடையர். 2. சைவநூலைப்பரிசோதிப்பவர். **தருமன்**—1. தருகின்றமன். 2. தருமராசன். 3. இந்திரன்.

மானிடராய்வரலரிதுவடிவுகுணங்கல்விசெல்வம்வந்துற்றாலுந்
தானமுஞானமுஞ்சிவநேசமும்பெறுதலரிதாமித்தனையிலொவ்வொன்
றேனையமாப்பிரபுவென்பாரெய்தினர்நீயிவையெல்லாமெய்தப்பெற்றா
யானதனான்முறையூர்ச்சண்முகவேளிங்நாளுன்போதிகந்தானே.

எல்லார்க்குமெலாங்கொடுப்பான்முறையூர்ச்சண்முகவேளென்றிசைப்பரந்தச்
சொல்லாகுமுற்றும்மையொரோவழியெச்சப்பொருளுந்தோன்றுமென்ன
நல்லார்சொல்லிலக்கணத்தின்படியமிழ்தத்தமிழறிந்தநன்னுவல்லீர்
பொல்லாதபகைவர்வரிற்புறங்கொடானென்றுநாம்புகலுவோமே.

உலகுபணிசிவனுரையிரவலரைமருவலரையுரிமையாக
நலமருவுநல்லாரையன்பினாற்கருணையினாவில்கோபத்தாற்
பலமுதவுமகிழ்ச்சியினாற்பார்க்குமறுமாதர்களெப்பரிசுற்றாலு
மலமருவப்பாராதுமுறையூர்ச்சண்முகவேள்கண்ணுமென்பாரே.

மன்னுமாதவனெனலான்மன்மதனைப்பெறலானுமருவுகல்வி
யன்னபணவரவுமேலுறலானம்பானேயமார்தலாலப்
பன்னுபொறைமேற்கொள்கையான்முத்தமிழார்கலியகற்றும்பான்மையாலே
தென்னவனாமுறையூர்ச்சண்முகவேளைமுகுந்தனைப்போற்செப்பலாமே.

இதில் முகுந்தனைக்குறிக்குமிடத்து மாதவன்-இலக்குமிநாயகன், மன்மதன்-மாரன், பணவரவு-படத்தையுடையபாம்பு, அம்பானேய மார்தல்-அழகிய பாலும் நெய்யு முண்ணுதல், பொறைமேற்கொள்கை-மலையைக்குடையாகமேற்கொண்டகை, ஆர்கலியகற்றல்-கடலைவற்றச் செய்தல் எனவும், பாட்டுடைத்தலைவனைக்குறிக்குமிடத்து உமாதவனெனலால்-உமாபதியென்று ஜெபம் செய்தலால், மன்மதன்-மிக்கவலி, பணவரவு-பொருள்வருவாய், நம்பால் நேயமார்தல்-நம்மிடத்து அன்பு நிறைதல், பொறைமேற்கொள்கை-பொறுமையைமேலாகக்கொள்ளல், கலிபகற்றல்-தரித்திரத்தைநீக்கல் எனவும் பொருள்கொள்க.

செட்டியார் உங்களையும் உங்கள் தமையனரையும் என்னிரு கண்மணியாகவைத்திருக்கின்றேன் எனக்கூறியதற்காக ஷை கவிராயர்கூறிய கவி.

என்னையுமென் றமையனையுமுன்னிருகண்மணியாகவிசைத்தாயாங்கள்
உன்னுசிந்தாமணியாகவுன்னையிந்தவுலகமெலாமுரைக்கின்றேமால்
இன்னவகைநண்புகொண்டசெல்வமுறுவணிகரையுமெந்தநாலும்
பன்னுகவிவாணரையுங்கண்டிலஞ்சண்முகமுறையூர்ப்பதிக்கோமானே.

மாட்டிலக்கண நொண்டிச்சிந்து. ஷை கவிராயர்செய்தது.

திருவளர் சேறைநகர்—அம்மையப்பர்
திருவடி யன்புடன் சிந்தைவைத்து
வருமாட்டிலக்கணத்தை—அறிவுள்ள
மானிடர் மனங்கொள வகுத்துரைப்பேன் (க)
சோடுதட்டி கால்வாரி—அரைகுளம்பு
சொல்லுமாட்டுக்குளம்பு திருகுகுளம்பு
நாடுகுத்துக்குளம்புடனே—விரிகுளம்பு
நண்ணுஞ் சிறுகுளம்பு குறையெலும்பு (உ)
முன்சுழி விலங்குச்சுழி—பஞ்சைச்சுழி
மூக்கடைப்பன் பாவைச்சுழி தாரைச்சுழி
பின்சுழி பெண்டிழந்தான்—சுழியொடு
பேசும் பொதிச்சுழி கோடைச்சுழி (ங)
இடிச்சுழி வாசகச்சுழி—ஒற்றைநாடி
யேலாத வொருபுள்ளி யானையின்கண்

படித்தவர்சொல் வெள்ளிக்கண்—ஊற்றுக்கண்
பரிய சதைக்கண்மிகு கடைக்கண்புள்ளி (ச)

ஆலம்பாடி யாளைப்பாய்ச்சி—அருங்கழுத்
தானவெக் காலிநீள் குறட்டைவாங்கி

மேலுஞ்சொல் கும்பக்குண்டி—கூம்பற்குண்டி
விளம்பு துறப்புக்குண்டி யானைச்செவி (ரு)

பசுமுகஞ் செங்கோலாட்டங்—கூழைவால்
பகர்கின்ற வெடிவா லுதைத்திடுங்கால்

நிசமிவை குற்றமென்று—தெரிந்தவர்
நிகழ்த்தினு ரினிக்குணஞ் சொல்லுகிறேன் (சா)

பிடிகொம்பு சன்னக்கொம்பு—கிளிக்கொம்பு
பிறங்கு மூச்சக்கொம்பு குடைக்கொம்பு

வடிவுறு மிரட்டைநாடி—இளரோமம்
வாய்ந்த குறுங்கழுத்துத் தெரிச்சவிழி (எ)

கருங்கண் வெளிச்சி மயிலை—கருமயிலை
கலப்பில்லாமயிலை காண்முன்னுரம்

வரும்பின் னுரம்பருங்கால்—பருங்கண்கள்
மருவும் பருங்குளம்பு பருவெலும்பு (அ)

ஆறுபல் பரியுடம்பு—சிறுதலை
யமைந்த சிறுத்தவால் சிறுகொம்பு

கூறுநற் சிறுநாடி—சிறுவயிறு
கோலச் சிறுத்தசிமிழ் சட்டஞ்சேர்தல் (கூ)

வேகநடையுடையடிப்பு—முன்னின்று
மேக்கா லெடுத்திடிற் கழுத்திடுதல்

ஆகிய விவைகளெல்லாம்—இருந்தாலும்
அமைத்திடு புல்வைக்கோ லெதுவேனும் (ω)

எடுத்திடி லாவலுடன்—றின்றுபின்
னெந்தநீர் விட்டாலு மந்தநீரைக்

குடித்திட வேண்டுமிந்த—நயமான
குணமுடன் பிடிபதின் மூன்றினுக்கு (மக)

மேலா யிருத்தல்வேண்டும்—இம்மாடே
மேதினி யுழவுக்கும் பண்டிக்குமே

நூலோர்க ளாகுமென்றார்—அவ்வாறு
நுவலிதைத் தள்ளாது கொள்ளுவீரே. (மஉ)

(தொடரும்.) இங்ஙனம்,

திருவாவடுதுறையாதீனவித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமான
சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

உ

# "தொல்காப்பிய வாராய்ச்சி."

செந்தமிழ் 20-ஆம் தொகுதியின் 498-ஆம் பக்கத்தொடர்ச்சி.

ககக. மருவின் றொகுதி மயங்கியன் மொழியு
முரியவை யுளவே புணர்நிலைச் சுட்டே.

இது பொருள்கோளைத் தழுவிச் செய்யுட்கண் மருவிமயங்கிய மொழியும் புணர்ச்சிக்குரியது என்றுணர்த்துகின்றது. "அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய" என்றவர் அவ்விருவகைச் சொற்களும் தம்மிற்புணராது பிறசொற்களோடு பொருள்கோள் காரணமாகப் புணரும் என்று கூறுகின்றாராதலின் மேலைச்சூத்திரத்தோடு இஃதியைபுடைத்தாயிற்று.

இ-ள். மருவுதலின் கூட்டங்காரணமாக நிறுத்தசொல்லோடு குறித்துவரு கிளவி நேராகப் புணராது மயக்கம்பெற்று இயலுகின்ற மொழிகளும் புணரும் நிலைமைக்கண் உரியனவுள என்றவாறு.

நிறுத்தசொல்லோடு குறித்துவருகிளவி நேரே மருவாது மயங்கி இயன்றமையானே அம்மொழி "மருவின் றொகுதி மயங்கியன் மொழி" எனப்பட்டது. "அடையோடு தோன்றினும் புணர்நிலைக் குரிய" என்றமைக்கேற்ப அதனின் வேறுபட்ட இதனையுங் கூறுதலே ஏற்புடைத்தாகுமென்க.

"இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பிற் பரலவ லடைய விரலை தெரிப்ப" எனனும் இஃது இனதொகுதி ஒன்றே படைத்ததென்னற்க, பரல் அவலை அடைதற்கு இரலை தெறித்தல் காரணமாகவிருத்தலின் என்க. இன்ன பலவாகிய நலன்கருதியே நிறுத்தசொல்லுக்கும், குறித்துவருகிளவிக்கும் இடையே பிறவந்து புகுமென்க. இத்தகையவற்றையெல்லாம் பொருள்கோளை விளக்குமிடத்து விரித்துரைக்குதும். இன்னவை கருதியன்றே பொருள்கோள் என ஒன்று வந்ததென்க.

மருவிவந்தமைக்கு விதிகூறல் அசம்பாவிதமாகும் ஆதலினானும் அங்ஙனம் கூறுதற்குப் புகினும் ஒருவரையறையின்றி மிகப்பல்கி வடமொழியாளர் அணிவகை விரித்தாங்குச் சென்றுதேய்ந்திற்றுவிடும் ஆதலினானும் ஆசிரியர் அவற்றிற்கெல்லாம் புறனடையானன்றி வேறு விதந்து விதிகூறார் என்க. ஆயிற் "பலரறி சொன்முன் யாவரென்னும்" என்றமை குற்றமாகாதோவென்னின்? ஆகாது; என்னை? அது வினைக்குறிப்புச் சொல்லோடு வேற்றுமையறிவான விதித்துப் போந்தமையானும், ஆண்டு மரூஉமுடிபை விளக்கவந்தமை யன்றாதலினானும் என்க.

இனி இலக்கணத்தோடு பொருந்திய மரூஉமொழிகளையும், இலக்கணமல்லா மரூஉமொழிகளையும் எவ்விதிகொண்டு அமைப்போம் என்று ஐயங்கொள்ளற்க, "வழங்கியன் மருங்கின் மருவொடு திரிநவும்", "அன்னவை யெல்லா மருவின் பாத்திய-புணரிய னிலையிடை யுணரத் தோன்றா" என்றாங்கு வரும் புறனடைகளானும், பிறவற்றானும் அவையெல்லாஞ் செவ்வே அமைதலின் என்க.

இனி, மண்ணாங்கட்டி, காணாங்கோழி, வடசார்க்கூரை, மேல்சார்க்கூரை, கல்லாம்பாறை என்பனவற்றை "உணரக் கூறிய புணரியன் மருங்கின்" என்னும் சூத்திரத்தானும்; அருமந்தான், சோணாடு, தொண்டைநாடு, மலாடு, பொதியில், முதலாயினதம்மை அதிகாரப்

புறனடைச்சூத்திரத்தானும் உரையாசிரியரும், ஆசிரியர் நச்சினார்க்கினிய ரும் தத்தமக்கேற்கு முறையறிந்து அமைத்துச் சேறலானும் அவ்விரு வகைய மரூஉமொழிகளையும் ஆண்டாண்டமைத்தலே பொருத்தமாகும் என்பது அவர்தமக்கும் உடன்பாடென்க.

இனி, ''அன்னவை யெல்லாம் மருவின் பாத்திய—புணரியனிலை யிடை யுணரத்தோன்று'' என்று ஆசிரியரும் விதித்துப்போதலின் அவற் றிற்குப் புணர்ச்சியுண்டென்றல் அவர்க்கும் பிறர்க்கும் கருத்தன்றென்க.

மரூஉமொழிகள் பிறசொற்களோடு ஏற்றவாறு புணர்தற்குக் குற்றியலிகரவுகரங்களைப்போன்று தனித்து விதிகூறுதற்கு இடனில்லை யாதலின் ஈண்டு அன்னவரெல்லாரும் பலவாறு விரித்துப்போதல் பொருத்தமுடையதன்று. ஆதலின் அன்னவுரையெல்லாம் இடைச் செருகலென்று தள்ளுக.

''அன்னவை யெல்லா மருவின் பாத்திய'' ''மருவின் பாத்தியிற் றிரியுமன் பயின்றே'' எனப் பிறண்டும் ''இன்'' என்பதைத் தனித்துப் பிரித்தற்கின்மையின் ஈண்டும் அங்ஙனமே பிரித்தற்காகாதென்க.

மரூஉமொழிகளை ''வழங்கியன் மருங்கின் மருவோடு திரிநவும்'' என்றாங்கு ஈண்டுக் கூறாது ''மருவின் றொகுதி வழங்கியன் மொழியும்'' என ஆசிரியர் கூறிப்போதலே எமது கருத்தை வலியுறுத்தாநிற்கும் என்க. ''மயங்கியல்'', ''வழங்கியல்'' என்பன ஆராயற்பாலன.

அன்றியும், ''மரு'', ''இன்றொகுதி'' என்றாங்குக் கண்ணழித்த லும் பிறவும் ஆசிரியரது சூத்திரப்போக்கிற் கிழுக்காகும். அங்ஙனம் கூறுதல் கருத்தாயின் ''மரூஉ மொழியின் றொகுதி மயங்கியன் மொழியெனு மிரண்டும் புணர்நிலைக் குரியவே'' என்றாங்குச் சூத்திரத் துச் செல்வர் என்பது தொல்காப்பியப் போக்கறிந்தார் தமக்கெல்லாம் புலனாகும்.

இவற்றானே, உரையாசிரியரை உள்ளிட்ட பெரியாருரைத்த உரையின் இடையிடையே பின்னுள்ளார் தமது கொள்கைக் கேற்றவா றெல்லாம் பொருந்தாத பலபலவற்றைச் செருகிவிட்டனர் என்க.

(தொடரும்.)

நவநீதகிருஷ்ணன்.

ட

# கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(சகஉ—ஆம் பக்கத் தொடர்ச்சி.)

99. செப்புங் காலைச் செங்கம லத்தோன் முதல் யாரும்,
எப் பெண் பாலும் கொண்(டு) உவ மிப்போர் உவமிக்கும்
அப் பெண் தானே யாயின போ(து) இங்(கு) அயல் வே(று) ஓர்
ஒப்(பு) எங் கே கொண்(டு) எவ் வகை நாடி உரைசெய்வேம்.

இ-ள். பிரமதேவர் முதலிய யாவரும் (தாம் வருணிக்க) எந்தப் பெண்ணையாயினும் (எடுத்துக்) கொண்டு (அவளுக்கு) ஒப்புக்கூறுநிற் போர் (ஆனபோது தாம் தாம் குறித்தபெண்ணுக்கு) ஒப்பாகக்கூறும் அந்தப்பெண் (ஆகிய இலக்குமிதேவி) தானே (சீதாதேவி) ஆகியிருக் கின்றதனால், (அவருக்கு) அந்நியமான வேறோர் ஒப்பை எப்படித் தேடி எங்கே (கண்டு) கொண்டு யாம் கூறுவேம்.

செப்புங்காலை—சொல்லுங்கால்—சொல்லுமிடத்து. செங்கமலத் தோன்—பிரமன். பெண்பால்—பெண். உவமித்தல்—ஒப்புக்கூறுதல். அயல் —அந்நியமானது.

100. உமையாள் ஒக்கும் மங்கையர் உச்சிக் கரம் வைக்கும்
கமையாள் மேனி கண்டவர், காட்சிக் கரை காணர்,
"இமையா நாட்டம் பெற்றிலம்" என்றார்: "இரு கண்ணால்
அமையா(து)" என்றார் அந்தர வானத் தவரெல்லாம்.

இ-ள். சீதாபிராட்டியின் திருமேனி அழகைக்கண்டவர்கள் (தாம் கண்ட) காட்சிக் (கடற்குக்) கரைகாணர் (ஆக, அவர்களுள் மண்ணவர்கள் இக் காட்சியை இடைவிடாமல் நோக்கிக்கொண்டிருக்க, விண்ணவர் போல,) "இமையாத கண்கள் பெற்றிருந்தேமில்லையே" என்றார்கள். விண்ணவர்கள், (இக் காட்சி) "இரண்டுகண்களால் (பார்த்தற்கு) அடங்காது" என்றார்கள்.

உச்சிக் கரம்வைக்கும் கமையாள் - தலையிற் கைவைத்துத் தொழுதற்குரிய (சிறந்த) பொறுமையுடையாள். சீதாபிராட்டி, ஒருவர் வயிற்றினும் பிறவாததனால், 'அயோநிசை' என்ற பெயர்படைத்து, "அகழ்வாரைத் தாங்கும் நிலம்" என்றுகூறும்படி பொறுமைக்குச் சிறந்த உவமானமான பூமியினின்று தோன்றி, பின்நாளில், இலங்கையிலே, சிறையிலிருந்தகாலத்தில் அநுமாரை நோக்கி "அல்லல் மாக்கள் இலங்கையதாகுமோ - எல்லைநீத்த உலகங்கள் யாவும் என்-சொல்லினால் சுடுவேன்: அது தூயவன் - வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன்." என்று கூறிய அறக்கற்புடைய பொறுமைசாலியாதலால், 'கமையாள்' என்றது மிகப் பொருத்தமானது.

101. வென்(று)அம் மானை, தார் அயில் வேலும் கொலை வாளும்
பின்ற,ம் மானப் பேர் கயல் அஞ்சப் பிறழ் கண்ணாள்,
குன்றம் ஆடக், கோவின் அளிக்கும் கடல் அன்றி
அன்(று)அம் மாடத்(து) உம்பர் அளிக்கும் அமு(து)அன்னாள்.

இ-ள். சீதாபிராட்டி, கடல் (கொடுத்த அமுதம்) அல்லாமல் மாடம் கொடுத்த அமுதம் போன்றார்.

அம் மானை வென்று - அழகியமானைச் செயித்து. தார் அயில் வேல் - (வெற்றி) மாலை (அணிந்த) கூர்மை (பொருந்திய) வேலாயுதம். பின்ற - (கொலைத்தொழிலில்) பிந்த. பேர் கயல் அஞ்சப் பிறழ் மானக் கண்ணாள் - பெயர்கின்ற (தன்மையுடைய) கெண்டை மீன் அஞ்சும்படி பிறழ்கின்ற பெரிய கண்களையுடையாள். குன்றம் - (மந்தர) மலை. கோ - 1. அரசன்; 2. பெருமையிற்சிறந்தோன்; இங்கே திருமாலைக் குறித்தது. கோவின் அளிக்கும் கடல் - திருமாலினாற் (பள்ளிகொள்ளப்பட்டுக்) காக்கப்படும் (பாற்) கடல், 'எழுதும் ஓலை' என்பது எழுதப்படும் ஓலையென்று பொருள்படல்போல, 'அளிக்கும்கடல்', அளிக்கப்படும் (=காக்கப்படும்) கடலெனப் பொருள்படநின்றது.

102. பெரும்தேர் அல்குற் பெண் இவள் ஒப்பாள் ஒருபெண்ணைத்
தரும் தான் என்றால் நால்முகன் இன்னும் தாலமே:
அருந்தா வந்(து)அத் தேவர் இரந்தால், அமிர்(து)என்னும்
மருந்தே அல்லா(து) என் இனி நல்கும் மணி ஆழி?

இ - ள். (தாம் படைத்த) சீதாபிராட்டியை ஒப்பவள் (ஆக வேறு) ஒரு பெண்ணைப் பிரமதேவர் இன்னமும் தரலாமே என்றால், தரலாம்: (அப்படித் தருவது, தம்மையே தாம் ஒத்த பிராட்டியையன்றி வேறொரு பெண்ணையன்று. இது எதுபோலெனில், தான் கொடுத்த அமுதத்தைச்) சாப்பிட்டுவிட்டுத் தேவர்கள் (தன்னிடம்) வந்து ("முன்கொடுத்த அமிழ்தத்தைப்போன்ற வேறோர் அமிழ்தம் தா" என்று) இரந்தால், கடல் அமிர்தத்தையே கொடுப்பதல்லாமல் (அமிழ்தையொத்த பொருள் அமிழ்தன்றி வேறின்மையால்) வேறு எதனைக் கொடுக்கும்? (ஒன்றும் கொடுத்தல் முடியாததுபோல என்பது போல என்க.)

பெரும் தேர் அல்குல் பெண் - பெரிய தேர் (த்தட்டினை ஒத்த) அரை (யையுடைய) பெண். தரும் - தருவான். தான் அசை. அருந்தா - அருந்தி - புசித்து. அமிர்தென்னும் மருந்து - அமிர்தென்று சொல்லப்படுகின்ற (சாவைத்தடுக்கும்) மருந்து. என் - யாது. மணி- 1. இரத்தினம். 2. அழகு. ஆழி - கடல்.

'அல்லாது' என்பதன் முன் 'நல்குதல்' என்ற சொல்லை (ப் பின் வரும் 'நல்கும்' என்பதற்குப் பொருத்தமாக) வருவித்துக்கொண்டு பொருள் காண்க.

உணவுப்பொருள்களுள் அமிழ்தத்தை ஒத்தது வேறு இல்லாதது போல, மாதருள்ளே சீதாபிராட்டியை யொத்தார் வேறு இலர் என்பது கருத்து.

103. அனையாள் மேனி கண்டபின், அண்டத்(து) அர(சு)ஆளும்
வினையோன் மேவும் மேனகை ஆதி மிளிர்வேற் கண்
இனையோர் உள்ளத்(து) இனைவலி னோர்தம் முகம் என்னும்
பனிதோய் வானின் வெள் மதிக்(கு) என்றும் பகல் அன்றே.

இ - ள். சீதாபிராட்டியின் திருமேனி (அழகைக்) கண்டபின்பு மேனகை முதலியோர் (ஆகிய அழகிற்சிறந்த தேவமாதர்கள் அம் மேனியழகுக்குத் தம் மேனியழகு மிகவும் குறைவானதனால்) மனத்துள்ளே துன்பமுடையோர் (ஆக,) அவர்களுடைய முகமென்னும் சந்திரனுக்கு எப்போதும் பகற்போதே (யாகவிருந்தது).

அண்டத்து அரசு ஆளும் வினையோன் - இந்திரன். மேவுதல் - விரும்புதல். மிளிர்தல் - பிரகாசித்தல். இனையோர் - இத்தன்மையினோர் - இவர்கள். இன்னலினோர்—துக்கமுடையோர். பனி - குளிர்ச்சி.

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்—கடுத்தது காட்டும் முகம்" என்றபடி மேனகை முதலியோர் மனத்துன்பத்தை அவர்கள் முகம் பொலிவிழந்து காட்டினதை 'அவர் முகமதிக்கு என்றும் பகல்' என்றதனால் இனிது குறிப்பித்தார்; சூரியன் எதிரே சந்திரன் பொலிவழிதல்போலச் சீதாதேவி எதிரே மேனகை முதலியோர் அழகழிந்தன ரென்பது கருத்து.

104\. மலர்மேல் நின்(று)இம் மங்கை இவ் வையத் திடை வைகப்
பல கா லும் தம் மெய் நனி வாடும் படி நோற்றார்,
அலகோ இல்லா அந்தண ரோ?நல் அறமேயோ ?
உலகோ? வானோ? உம்பர் கொ லோ?ஈ(து) உணரேமால்!

இ - ள், இந்தப் பிராட்டி (தாம்வாழும்) தாமரைமலர்மேலிருந்து (இறங்கி) இந்த உலகத்திலே தங்கும்படியாகப், பலமுறை தம் உடம்பு மிகவும் வாடும்படிதவஞ்செய்தவர்கள் அந்தணர்களோ? தருமதேவதையோ? மண்ணுலகோ ? விண்ணுலகோ ? (பிரமாதி) தேவர்களோ ? என்பதை யாம் அறியேம் !

வையத்திடை-பூமியில். வைக-தங்க. அலகு-அளவு. ஓ அசை.

சீதாபிராட்டி (பின் நாளில்) இலங்கையிலே சிறையிருந்ததனால் இராவணாதி இராக்கதர் நாசமடையப் பாவம் தாழப் புண்ணியம் ஓங்க அந்தணர் முதலிய மண்ணுலகத்தோரும் பிரமதேவர் முதலிய விண்ணுலகத்தோரும் உய்ந்தார்களாதலால், இவர்களில் எவர்செய்த புண்ணியத்தினால் இலக்குமிதேவி சீதாதேவியாகப் பூமியில் அவதரித்தாரோ? தெரியேமென்றார். எல்லாரும் செய்த புண்ணியத்தின் பயனாக அவதரித்தாரென்பது போந்த பொருள்.

105\. தம் நேர் இல்லா மங்கையர், 'செங்கைத் தளிர் மானே !
அன்னே! தேனே! ஆரமிர் தே!'என்(று) அடிபோற்றி,
முன்னே முன்னே மொய் மலர் தூவி முறை சாரப்,
பொன்னே சூழும் பூவின் ஓதுங்கிப் பொலிகின்றாள்.

இ - ள். (சீதாபிராட்டி, செவிலித்தாயர் முதலிய) மாதர்கள் 'மானே! தேனே! அமுதே! அம்மே!' என்று (அருமையாகக்) கூறி (அழைத்து, இந்தப்பூத்திரள்மேல் நடப்பாயாக, இந்தப் பூத்திரள்மேல் நடப்பாயாக (என்று சொல்லிக்கொண்டு) அவர் பாதங்கள் நோவாமற் காப்பதற்காக (அவர் செல்லும் வழிக்கு) முன்னுகமுன்னுகத் திரளான மலர்களைச் சொரிந்துகொண்டு முறையாகப் பக்கத்திலே வர, அந்தப்பூத் திரள்மேல் நடவாநின்று விளங்குகின்றார்.

அன்னே - அன்னையே - தாயே. ஆரமிர்து - அருமையான அமிழ் தம். அடிபோற்ற மலர் தூவி - (சீதையின்) பாதங்கள் நோவாமற் காக் கும்படி (அவள் செல்லும் இடங்களிலே) பூச்சொரிந்து. முறைசார— முறையாக அடுத்துவர. பொன்னே சூழும் - அழகுபொருந்திய ஏகாரம் அசை. பூவின் — (தூவிய) பூமேல். ஒதுங்கி - நடந்து. (பத்துப்பா. அரும்பத உரை); சென்று (பரிபாடல் 2. அடி ௧௮). பொலிகின்றாள், சரித்திர நிகழ்காலவினை.

106. கொல்லும் வேலும், கூற்றமும், என்னும் இவை எல்லாம்
வெல்லும், வெல்லும், என்ன மதர்க்கும் விழி கொண்டாள்,
(சொல்லும் தன்மைத்(து) அன்(று)அது.) குன்றும் சுவரும்திண்
கல்லும், புல்லும் கண்(டு)உரு கப்,பெண் கனி நின்றாள்.

இ - ள். (சீதாபிராட்டி,) கொல்லுகின்ற வேலும் கூற்றும் என்று சொல்லப்பட்ட இவை (முதலிய கொலைசெய்வன) எல்லாவற்றையும் நிச் சயமாக வென்றுவிடுமென்று சொல்லும்படி களிக்கின்றகண்களைக்கொண் டார். (அவ்வாறு கொண்டது (இன்னதென்று புலப்படும்படி) சொல் லக்கூடிய தன்மையதன்று.) அவர் (பெரிய) மலையும் (சிறிய) சுவரும் வன்மையான கல்லும் (மென்மையான) புல்லும் (முதலிய எல்லாப் பொருள்களும்) கண்டுஉருகும்படி பெண் (நலம் கனிந்த) கனியாக நின் ருர்.

சீதாபிராட்டியைக் காணும் சேதனராகியமாதரும் சேதனசிரேட்ட ராகிய இராமரும் எவ்வளவு இன்பமடைவாரென்பதை மனத்தினுற் பாவித்துக்கொள்ளுமாறு அடுத்தபாட்டிற்கூறுதற்குப் பூர்வபீடிகையாக, இப்பாட்டில், மலை முதலிய அசேதனங்களே 'கண்டுருகப் பெண் கனி

நின்றாள்' என்றார். சேதனர் - அறிவுடையோர். அசேதனம் - அறிவில்லாதது.

வேறு.

107. வெம் களி யினுக்(கு)ஒரு விழவும் ஆய்,அவர்
கண்களிற் காணவே களிப்பு நல்கலால்,
மங்கையர்க்(கு) இனிய(து)ஓர் மருந்தும் ஆயவள்
எங்கள் நா யகற்(கு)இனி யாவ(து) ஆம் கொலோ!

இ-ள். (கண்டு) களித்தற்கு ஒரு திருவிழாவும் ஆகி, மாதர்கள் கண்களாற் கண்ட அளவிலேயே களிப்பை அளிப்பதால் அவருக்கு இனிய அமிர்தமும் ஆகிய சீதாபிராட்டி இராமபிரானுக்கு வேறு எப்பொருளாவளோ!

வெம் களி - விருப்பமான களிப்பு. விழவு - திருவிழா. அவர், மூன்றும் அடியில்வரும் மங்கையரைச் சுட்டியது. ஓர் - ஒப்பற்ற. மருந்து - அமிர்தம். இனி - மற்று (உரிச்சொல்நிகண்டு-கசு௦) யாவது - யாது. ஆம் - ஆவாள்.

முந்தியபாட்டில் மலை முதலிய பொருள்களுக்குச் சீதாபிராட்டி கனியானாரென்று, இந்தப்பாட்டில் மாதருக்குக் கனியினுமினிய அமிழ்தமானாரென்று, அமிழ்தினுமினியபொருளின்மையால் இராமபிரானுக்குஎப்பொருளாவளோ என்றதனால் அமிழ்தினும் இனியவராயினாரென்பதை இனிது புலப்படுத்தினார்.

'வெங்களிவிழிக்கு' என்ற பாடம்கொண்டால், அதற்கு (மாதரது) விருப்பத்தைத் தருகின்ற களிக்கின்ற கண்களெனவும், அதற்குப் பொருத்தமாக 'அவர் கண்களிற் காணவே' என்பதற்கு அவர்களுடைய அந்தக் கண்களாற்கண்ட மாத்திரையே எனவும் பொருள் கொள்க.

108. இழைகளும் குழைகளும் என்ன முன்னமே
மழை பொரு கண் இணை மடந்தை மாரொடும்
பழகிய தெனினும், இப் பாவை தோன்றலால்,
அழ(கு)எனும் அணியும் ஓர் அழகு பெற்றதே!

இ - ள். (தான் தோன்றியநாள்தொட்டுத் தன்னை அணிவார்க்கு) அழகு (செய்வது) என்னும் (காரணத்தினால் அழகென்னும் பொருள் உள்ள) அணி (என்னும் பெயரையுடைய ஆபரணமானது, கழுத்திலணியும் மாலைகள் முதலிய) பேரணிகலன்களும் (காதிலணியும்) குழை (கள் முதலிய சிற்றணிகலன்) களுமென (ச் சீதாபிராட்டி பிறக்கும்) முன்னேயே மாதரோடு (அவர்களால் அணியப்பட்டுப்) பழகியுள்ளதென்றாலும், (தான் அவர்களுக்கு அழகு அளித்ததேயன்றி அவர்களால் தான் அழகு பெறவில்லை;) சீதாபிராட்டி அவதரித்ததினால் (அவரது திருமேனியில் அணியப்பட்டுப் புதிதாகிய) ஓர் அழகினைப் பெற்றது.

இழை - பேரணிகலம் (பத்துப்பாட்டு அரும்பதவுரை). குழை — குண்டலம். மழை பொரு - குளிர்ச்சி பொருந்திய. 'விண் பொரு புகழ்' எனப் புறநானூற்றில், கக-ம் பாவில் வருதல் பார்க்க.

'இன்ன முன்னமே' என்றும் 'அழகெனுமதுவும்' என்றும் 'அழகெனுமழகும்' என்றும் பாடபேதங்கள் உண்டு.

109. எண்ணரும் நலத்தினாள் இனையள் நின்(ற)உழிக்,
கண்ணொடு கண் இணை கௌவி ஒன்றை ஒன்(று)
உண்ணவும், நிலை பெறா(து) உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்.

இ - ள். அளவிடற்கரிய அழகுடையசீதாபிராட்டி இத்தன்மையளாய் நின்றகாலத்தில், ஒருவர் பார்வையோடு ஒருவர் பார்வை ஒன்றையொன்றுபற்றி விழுங்கினாற்போல ஒற்றுமைப்படவும், (இருவர்)உணர்வுகளும் (தத்தம் இடத்தே) நிலைபெறமாட்டாமல் (ஒன்றையொன்று நாடிக் கூடி) ஒன்றாய்க் கலக்கவும் (காதற்பார்வையாக) இராமபிரானும் பார்த்தார், சீதாபிராட்டியும் பார்த்தார்.

'எண் அரும்' என்பது "பார்த்தற்கும் சொல்லுதற்குமேயன்றி நினைத்தற்கு மரிய என்பதுபட நின்றமையின் எண் என்பதனீற்றில் தொக்குநின்ற வும்மை இறந்தது தழீஇயது. எண் முதனிலைத்தொழிற் பெயர்" (ஸ்ரீ இராமசாமிநாயுடு).

110. பருகிய நோக்(கு)எனும் பாசத்தால் பிணித்(து)
ஒருவரை ஒருவர் தம் உள்ளம் ஈர்த்தலால்
வரி சிலை அண்ணலும் வாட் கண் நங்கையும்—
இருவரும்—மாறிப்புக்(கு) இதயம் எய்தினர்.

இ-ள். இராமபிரானும் சீதாபிராட்டியும் (கண்ணாகிய வாயால் ஒருவரை ஒருவர்) விழுங்கிய (வர்போலப் பார்த்த) பார்வையென்ற கயிற்றினாற் கட்டி ஒருவரை மற்றொருவர் மனம் இழுத்தலால்—இருவரும்—(அவரவர் மனமாகிய இருப்பிடம் விட்டு) மாறி (ஒருவர் மற்றொருவர்) மனத்துட் பிரவேசித்திருந்தார்கள்.

பருகுதல்-விழுங்குதல் (பத்துப்பாட்டு அரும்பதவுரை). வரிசிலை-கட்டியவில். (வரி வில் - வரிந்தவில். (பத்துப்பாட்டு அரும்பதவுரை).

ஒருவர் மனத்தில் ஒருவர் குடிகொள்ள, இருவரும் தம்மைமறந்து மற்றவரையே நினைப்பாராயினரென்பது கருத்து.

111. மருங்(கு)இலா நங்கையும் வசை இல் ஐயனும்,
ஒருங்கிய இரண்(டு)உடற்(கு) உயிர் ஒன்(று) ஆயினர்
கருங் கடற் பள்ளியிற் கலவி நீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினல் பேச வேண்டுமோ?

இ-ள். இருவரும் ஈருடம்பிற்கு ஒருயிராயினர்: (பாற்)கடலிலே (சர்ப்ப) சயனத்திலே கூடியிருத்தலைவிட்டுப் பிரிந்துபோனவர்கள் (திரும்ப எதிர்பாராதெதிர்ப்பட்டுக்) கூடினல் (அவர்களுக்குண்டாம் அன்புப்பெருக்கைச்) சொல்லவேண்டுமோ? (வேண்டா).

ஒருங்கிய - ஒருங்கும்படி—ஒன்றும்படி. இது 'செய்யும்படி' என்று பொருள்படும் 'செய்யிய' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். கருங்கடல் - பெருங்கடல்; கரிய கடலன்று, பாற்கடலைக் குறித்தலால். பள்ளி - படுக்கை. போய்ப் பிரிந்தவர் என்பதைப் 'பிரிந்துபோயவர்' என விகுதிமாற்றிக் கூட்டுக.

112. அந்தம் இல் அழகனை அணுகி லாமையால்
பைந் தொடி ஓவியப் பாவை போன்றனள்:
சிந்தையும் நிறையும்மெய்ந் நலனும் பின் செல,
மைந்தனும் முனியொடு மறையப் போயினன்.

இ-ள். எல்லையில்லாத அழகுடையாராகிய இராமபிரானை அடையப்பெறுமையால் சீதாபிராட்டி (உயிரில்லாத) சித்திரப் பாவையை ஒத்தார்: அவருடைய மனமும் கற்பும் தேகசௌந்தரியமும் தம்மைப் பின் தொடர இராமர் விசுவாமித்திரமுனிவருடன் கண்மறையச் சென்றார்.

113. பிறை எனும் நுதலவள் பெண்மை என்படும்?
நறை கமழ் அலங்கலான் நயன கோசரம்
மறைதலும், மனம் எனும் மத்த யானையின்
நிறை எனும் அங்குசம் நிமிர்ந்து போயதே.

இ-ள். (அவர் சென்றதனால் அவரைப் பார்த்துக்கொண்டிருந்த பரமானந்தத்தை இழந்த) பிராட்டியின் (நாணம் முதலிய) பெண்மைக் குணங்கள் என்னபாடுபட்டன? (அது சொல்லும் தரத்தினதன்று; ஒருவாறு சொல்லின், இராமர் கண்பார்வையினின்று மறைந்தவுடனே, சீதாதேவியின் மனமென்ற மதயானையினது நிறையென்ற தோட்டி (அவ் யானை அடங்காது செல்வதை அடக்குதற்குப் பலமாக இழுக்கப் பட்டபோது) நிமிர்ந்துபோய்விட்டது.

பெண்மை—பெண் தன்மை-மாதர்க்குரிய அமைதி அல்லது அடக்க முடைமை; (பெண்மை — அமைதித்தன்மை. சிந்தா. அரும்பதவுரை) நறை - நறுநாற்றம். கோசரம் - புலனுக்கு விடயமானது. நயனகோசரம்- கண்ணுக்குத் தெரிதல். மத்த யானை - மதயானை. ('மத்தப் புகர்முகக் களிறு' மணிமேகலை அரும்பத அகராதி). நிறை—நெஞ்சைக் கற்புநெறியில் நிறுத்தல் (௯டி பக்கம் ௧௯௫).

மனம் விவேகத்துக்கடங்காமல் காமாவேசமுற்றதென்பது கருத்து.

114. மால் உற வருதலும், மனமும் மெய்யும் தன்
நூல் உறு மருங்குல் போல் நுடங்கு வாள் நெடும்
கால் உறு கண் வழி புகுந்த காதல் நோய்
பால் உறு பிரை எனப் பரந்த(து) எங்குமே.

இ-ள். ஆசை அதிகமாக வளர்ந்தவுடனே, மனமும் தேகமும் இடைபோல மெலிவுற்ற சீதாதேவியின்கண்வழியாக உள்ளேபிரவேசித்த காமநோய் பாலில் உற்ற பிரைபோல (க் கண்ணோடு மற்றைப்பொறிகளும் அடங்கிய உடல்) எங்கும் வியாபித்தது.

மால் உற வளர்தலும் - மோகம் மிகுதியாக வளர்ந்தவுடனே. வருதல் - வளர்தல் (சங்க அகராதி). நூல் உறு - நூல் போன்ற. உறுவது - ஒப்பது (சிந்தா அரும்பதவுரை). கால் உறு கண்வழி புகுந்த - காதல் நோய் - தான் புகுதற்கு; வழியாக உற்ற கண்வழியாக உள்ளே பிரவேசித்த காம வியாதி. கால் - வழி (பிங்கலம் ௩௩௩௭). பிரை - உறை - பால் தயிராவதற்கிடும் மோர்த்துளி.

காரணம் மிகச்சிறிதாயினும் காரியம் மிகப்பெரிதாவதற்கும் பாலிலிடுபிரை சிறந்த உதாரணம். இதனை இன்னும் சிறப்பாகச் "சீரிய பாலின் வேலை சிறுபிரைதெறித்ததன்னான்" என்பர் பின்னர்.

[மனத்தில் நினைந்ததை வாயாற் சொல்லமாட்டாத ஊமர்போலத் தாம் உற்ற காமநோயைச் சொல்லமாட்டாதவராய்த் தேவர்கடையயாவையும் கொடுத்து வெறுமையான பாற்கடல்போல, உடையும் வளையும் உணர்வும் உள்ளமும் உடலொளியும் இழந்திருந்த சீதாதேவியைத் தோழியர்கள் கொண்டுபோய் மலர்கள் பரப்பிய படுக்கையிற்சேர்த்தார்கள். அப்போது அவர், காம பரவசராய் வில்லேந்திய கரியமேனியையுடைய இராமபிரானை நினைந்து வில்லோடு பூமியிலே இறங்கிய மேகமென்பார்].

115. "நெருக்கி உள் புகுந்(து),அரும் நிறையும் பெண்மையும்
உருக்கி,என் உயிரொடும் உண்டு போனவன்
பொருப்பு உறழ் தோள் புணர் புண்ணியத்தது
கருப்பு வில் அன்(று;)அவன் காமன் அல்லனே.

இ - ள். "வலாற்காரமாய் (என்) நெஞ்சினுள்ளே பிரவேசித்து (எனது) அருமையான நிறையையும் பெண்தன்மையையும் நெகிழச்செய்து (அவற்றை) என் உயிரோடும் கவர்ந்துகொண்டுபோனவருடைய மலையொத்த தோளைச் சேரும் பாக்கியத்தையுடையது கரும்புவில்லன்று: (ஆதலால்) அவர் காமன் அல்லர்.

நெருக்கி உள் புகுந்து - வலாற்காரமாய் மனத்தினுட்பிரவேசித்து. உண்டு போனவன் - கவர்ந்துகொண்டுபோனவன் (தாற்பரியப் பொருள்) பொருப்பு உறழ் - மலைபோன்ற.

"அழகினால் மன்மதனோ வென்றெண்ணின பிராட்டி, அவன் தோளிலிருப்பது மூங்கில் வில்லே, கரும்புவில்லன்றென் றுணர்ந்து, அதனால் அவன்மன்மதனல்லனென்று தேறினாளென்பது கருத்து மூங்கிலாற் செய்யப்பட்ட வில் அவர் தோள்களைப் புணர்தற்குரிய புண்ணியஞ் செய்திருந்ததே அதுவும் யாம் செய்திலமே யென்றிரங்கினா ளென்பது குறிப்பு". (ஸ்ரீ இராமசாமிநாயுடு.)

116. "பெண் வழி நலனொடும், பிறந்த நாணொடும்,
எண் வழி உணர்வும் நான் எங்கும் காண்கிலன்:
மண் வழி நடந்(து)அடி வருந்தப் போனவன்
கண் வழி நுழையும் ஓர் கள்வனே கொலாம்?

இ. ள். "எனது பெண்நலங்களையும் அவற்றுடன் தோன்றிய நாணத்தையும் என் அறிவையும் நான் (என் அகத்துள்ளே) எங்கும் (தேடிப்பார்த்தும்) காண்கின்றிலேன். (ஆதலால் அவைகளவு போயிருக்கவேண்டும் அவை அவர் வருமளவும் இருந்து பின்பு காணாமையால் அவைகளை அவரே களவுசெய்திருக்கவேண்டும். ஆயின் அவர் எவ்வழியே என் அகத்துட் புகுந்து களவாண்டா ரென்பது தெரியவில்லை. வேறுவழியில்லை யாதலால் அவர்) கண்வழியே நுழையும் கள்வர் போலும்.

பெண்வழிநலன்—பெண்களுக்கு வழிவழியாகவரும் நற்குணங்கள். பிறந்தநாண்—(அந்த நலங்களோடு கூடவே) தோன்றிய (அவற்றுள்ளே சிறந்த) நாணம். எண்வழி உணர்வு—"மனத்தினிடத்துள்ள அறிவு. எண்வழி–எண்ணுமிடத்து".

சீதாபிராட்டி, இராமபிரானைக் கள்வர் என்றதனால் வெறுப்பது வெளிப்படையும் தோற்றமுமாகவும், மென்மையான பூமேல் நடவாமல் வன்மையான மண்மேல் அடிவருந்த நடந்துபோனவர் என்றதனால் விரும்புவது குறிப்பும் உண்மையுமாகவும் இருத்தல் கவனிக்கத்தக்கது.

117. "இந்திர நீலம் ஒத்(து) இருண்ட குஞ்சியும்,
சந்திர வதனமும், தாழ்ந்த கைகளும்,
சுந்தர மணி வரைத் தோளுமே அல!
முந்தி என் உயிரை அம் முறுவல் உண்டதே!

இ. ள். "நீலரத்தின (க் கதிர்க் கூட்ட) த்தை ஒத்து (இனிதாக) இருண்டகேசமும், பூரணசந்திரன்போன்றமுகமும், (முழந்தாள்வரை) தாழ்ந்த கைகளும், அழகிய நீலமலைநேரானதோள்களும் அல்ல, முதல் முதலாக என் உயிரை உண்டவை! (மற்று எது முன்னதாக உண்ட தெனின், என் மனத்தைவிட்டு நீங்காத அந்தப்) புன்னகையே!

இந்திரநீலம்—நீலரத்தினம். குஞ்சி—ஆண்மக்கள் தலைமயிர். மணி—நீல ரத்தினம். முறுவல்—சிரிப்பு; இங்கேபுன்சிரிப்பென்று பொருள்பட நின்றது.

அவர் சம்பந்தமான எல்லாம் என் உயிரை உண்டன; ஆயினும் அவற்றுள் முற்பட்டு என்னுயிரை யுண்டது அவர் புன்னகையே: புன்னகை உண்டு எஞ்சிய உயிர்ப்பகுதியைக்கேசம் முதலியவை உண்டன வென்பது கருத்து.

118. "படர்ந்(து)ஒளி பரந்(து)உயிர் பருகும் ஆகமும்
தடம் தரு தாமரைத் தாளு மே அல,
கடம் தரு மா மதக் களி நல் யானை போல்
நடந்தது கிடந்த(து)என் உள்ளம் நண்ணியே.

இ. ள். "விசாலமாய் ஒளிபரவப் பெற்றதாய் என் உயிரை உண்ட மார்பும் தாமரைமலர் போன்றபாதங்களும் (ஆகியவைகளில் ஒன்றும்) அன்று (என்மனத்தே நீங்காதுள்ளது; வேறெதுவெனில்,) மிகுந்தமதம் பொழிகின்ற செருக்குடைய யானை போல (க்கம்பீரமாக) நடந்தது என் உள்ளத்தை ஒட்டிக்கிடந்தது (என்பது).

தடம் தரு தாமரை—1. தடாகம் (உண்டாக்கிக்) கொடுக்கின்ற தாமரைமலர்; 2. மலர்களிற்சிறந்ததென்ற) பெருமையைக்கொண்ட தாமரைமலர்.) தருதல் - கொள்ளுதல் (புற. வெண். மாலை. அரும் அகராதி.)

மார்பழகினும் தாளழகினும் அதிகமாக நடையழகு மனத்தில் நிலைத்திருக்கின்றதென்பது கருத்து.

119. "பிறந்(து)உடை நலநிறை பிணித்த எந்திரம்
கறங்குபு திரியும் என் கன்னி மா மதில்

எறிந்த அக் குமரனை இன்னும் கண்ணிற் கண்டு
அறிந்(து)உயிர் இழக்கவும் ஆகு மே கொல் ஆம்?"

இ - ள். "என்னுடன் கூடப்) பிறந்து என் உடைமையாயுள்ள கற்பென்னும் யந்திரம் எவரும் அணுகாமல் காத்தற்கு எப்பக்கமும்) சுழன்று திரியப்பெற்ற எனது கன்னித்தன்மையாகிய மதிலை அழித்த அந்த (அரசிளங்) குமாரனை இன்னும் (ஒருமுறை) கண்ணாரப்பார்த்து அவரை நன்கு) அறிந்து (கொள்ளும் பாக்கியம் பெற்ற பின்பு இறந்தால் சந்தோஷத்தோடு இறப்பேன்; அப்படி) இறக்கவும் கூடுமோ?"

உடை - உடைமை (சங்க அகராதி). நல நிறை - நல்ல கற்பு. பிணித்த - கட்டிய. கறங்குபு - சுழன்று. மதில் எறிந்த - மதிலை அழித்த.

[என்று இவை போல்வன பல கூறி, இராமபிரானது உருவெளித் தோற்றத்தைக்கண்டு "இதோ வந்தார்" என்றும் அது மறையவே "அதோ! போய்விட்டார்" என்றும் புலம்பிச் சீதாபிராட்டி வருந்தும் போது, அவரைச்சுட்ட காமாக்கினி தன்னையுஞ்சுடத் தாங்கமாட்டாதவனாய் அச்சூட்டைத்தணிக்க மேற்கடலில் விழுந்தான்போலச் சூரியன் அத்தமித்தான். தென்றலாகிய பாசத்தைவீசி, செவ்வானமாகிய சிவந்த தலைமயிரும் இருளாகிய கருநிறமுங் கொண்டு காலன் வந்தது போல மாலைப்பொழுது வந்தது. பொழுதுபோயினமையால் கூடுதேடி அடையும் பறவையொலி தான் கொட்டும் பறையொலியாக கடலொலி காற்சிலம்பொலியாக, இருள் கருநிறச்சட்டையாகப் பூதம் புறப்பட்டதென்று சொல்லும்படியாக அந்தி மாலை தோன்றியது. அதனை நோக்கிச் சீதாபிராட்டி கூறுகின்றார்.]

120. மை வான் நிறத்து மீன் எயிற்று வாடை உயிர்ப்பின் வளர் செக்கர்ப்
பை வாய் அந்திப் பட அரவே! இன்னா விளைத்துப் பகைத்தியால்?;
எய்வான் ஒருவன் கை ஓயான்; உயிரும் ஒன்றே; இனி இல்லை!
உய்வான் உற:இப் பழிபூண உன்னோ(டு) எனக்குப் பகை உண்டோ?

இ - ள். "ஆகாய நிறத்தையும் நட்சத்திரப் பற்களையும் வாடைக் காற்றுப் பெருமூச்சையும் செவ்வான வாயையுமுடைய அந்திப்பாம்பே! துன்பம் உண்டாக்கி (என்னை) விரோதிக்கின்றாய்? என் உயிருக்காக

வென்றால், அதற்காக, நீவருமுன்பே (எதற்காக வந்து என்மேல் அம்பு) எய்வானுயினுன் ஒருவன்; (அவன் அதைக்கொண்டாலன்றி எய்யும்) கை ஓயான்; உயிரோ, (எனக்கு) ஒன்றே (உள்ளது); அதை அவன் கொண்டபின், நான்) பிழைத்திருக்க வேறு (உயிர்) இல்லை; (உயிர் இல்லாது போகவே, நீ என்மீது பகைசெலுத்தலால் என் உயிரை உண்ணும் பயனைப் பெருய்; பெருயாகவும்என்னை வீணே பகைக்கின்ற) இந்தப் பழி பூணுதற்கு (முன் பகையிருத்தல்வேண்டும்; அப்படி) உனக்கும் எனக்கும் பகையுண்டோ? (இல்லை: உண்டேல், சொல்வாயாக.)

வான் மை நிறத்து - ஆகாசம் கரு நிறத்தையுடைய. மீன் எயிற்று - நட்சத்திரப் பற்களையுடைய. வாடை உயிர்ப்பின் - வாடைக் காற்றுப் பெருமூச்சினையுடைய. வளர் செக்கர்ப் பை வாய் - பெருகிய செவ்வானமாகிய பை போன்ற வாயினையுடைய 'பைவாய்' பரந்தவாயெனலுமாம். பைத்தல் - பாத்தல் (சங்க அகராதி). இன்னு - துன்பம். பகைத்தி - பகைக்கின்ருய். 'ஒருவன்' மனமதனைக்குறித்தது. இனி - மற்று - வேறு (உரி. நிக. கசூ0) உய்வானஉற - உய்தலை அடைய உய்தல் - பிழைத்தல் - சீவித்தல். (புறநா. அரும்பத.) 'உய்வான் உற இனி இல்லை' எனக்கூட்டிப் 'பிழைத்திருக்க வேறு (உயிர்) இல்லை' என்று பொருள் கூறப்பட்டது. உய்வான் உறவு இனி இல்லை - உய்தல் உறுதல் இனி இல்லை (யெனலுமாம்.)

'மீனெயிற்று' என்ற பாடமேயன்றி, 'மின்னெயிற்று' என்றபாடமும் உண்டு. இப்பாடம், இரவிலேயன்றி மாலையிலே நட்சத்திரங்கள் காணப்படுதல் இல்லை யென்பது பற்றிக் கொள்ளப்பட்டதுபோலும் 'இப்போதுமாலை போயிற்று', இப்போது இரவு வந்தது' என்று சொல்லக்கூடாத நேரமும் உண்டன்றே? அந்த மாலை முடியாமலும் இரவு தொடங்காமலும் உள்ள சந்திநேரத்திலே, இரவிற் பேரொளி வீசும் நட்சத்திரங்களிற் சிறந்தன சில, மற்றைச் சிற்றொளி நட்சத்திரங்கள் தோன்றுமுன் தோன்றுபவைகளையுட்கொண்டு, கவி 'மீனெயிற்று' என்று பாடினுரெனல் பொருந்தும்.

121. "ஆலம் உலகில் பரந்ததோ! ஆழி கிளர்ந்த தோ அவர்தம்
நீல நிறத்தை எல்லாரும் நினைக்க அது ஆய் நிரம்பியதோ!
காலன் நிறத்தை அஞ்சனத்தில் கலந்து குழைத்துக் காயத்தின்
மேலும் நிலத்தும் மெழுகியதோ! விளங்கும் இருளாய் விளைந்ததுவே!"

இ. ள். "ஆலகாலவிடம் உலகத்திலே பரவியதோ! சமுத்திரம் (மேலோங்கி எங்கும்) பெருகியதோ! அவருடைய நீல நிறத்தை யெல்லாரும் நினைக்க அந்த நிறமே எங்கும் ஆகி நிறைந்ததோ! இயமனது நிறத்தை (க் கண்ணுக்கிடும்) மையோடுகலந்து குழப்பி ஆகாயத்தின் மேலும் பூமியின்மேலும் மெழுகியதோ! (இவற்றுள் எது, இவை ஒவ்வொன்றும் செய்யும் துன்பத்தைச் செய்கின்ற) இருளாய்விளைந்தது!"

கிளர்தல்—பெருகுதல் (புறப் வெண் மாலை அரும்பத அகராதி) காயம்—ஆகாயம்.

இப்போது கூறிய இருள் மாலையிருள்போனபின் வந்த இரவின் இருளை. அவ் விருளினும் இவ் விருள் மிகுந்து புலப்பட்டதனால் 'விளங்கும் இருள்' என்றார். ஆலகாலவிடம் முதலியவை விதையாக, அவை முளைத்து வளர்ந்து, விளைந்தது இருள்என்றும், விதையைநோக்க அவ்விதையின் விளைவு மிகவும் பெருக்கமாயிருப்பது போல, ஆலாலவிட முதலியவற்றினும் இருள் (இருண்ட தன்மையினும் துன்பஞ் செய்தலினும்) மிகவும் பெரிதாயிருந்ததென்றும் 'விளைந்ததே' என்றதனால் குறிப்பித்தார்.

[மேற்கூறியவாறு சீதாபிராட்டிகூறித் துன்புறும்போது அவருக்கு வெப்பஞ்செய்யுமென்று சாதாரண விளக்கேற்றாமல் தாதியர் தூண்டுதல் வேண்டாத(இரத்தினதீபம்வைத்து இரவைப் பகல்போலச்செய்தார்கள்]

122. பெருந்திண் நெடுமால் வரை நிறுவிப் பிணித்த பாம்பின் மணித்தாம்பால்,
விரிந்த திவலை உதிர்ந்த மணி விசும்பின் மீனின் மேல் விளங்க,
அருந்த அமரர் கலக்கிய நாள் அமுதம் நிறைந்த பொன் கலசம்
இருந்த(து) இடைவந்(து) எழுந்த(து)என எழுந்த(து) ஆழி வெண்திங்கள்.

இ-ள். திருமால் (மந்தர) மலை(யாகிய மத்திலே)கட்டின வாசுகி என்னும் பாம்புக் கயிற்றினால் (பாற்கடலைக் கடைந்து அமுதம்எடுத்து) உண்ணும்படி தேவர்கள் (அந்தக்கடலைக்) கலக்கிய காலத்தில் நீர்த்துளிகளோடு தெறித்த மணிகள் நட்சத்திரங்களினும் அதிகமாக விளங்க, அமிர்தகலசம் (அக்கடலினுள்) இருந்தது (அக்கடலிலிருந்து வெளிப்பட்டு) எழுந்ததுபோலக் கடலிலே சந்திரன் உதயமானது.

நிரை நிறுவிப் பிணித்த - (மந்தர) மலை யாகிய மத்திலேவிலகாது) நிற்கும்படி செய்து கட்டின. அந்த - (பாற்கடலினின்று அமுதம் கடைந்தெடுத்து) உண்ணும்படி. ஆழி - கடல்.

"பிரதான உபமானமான அமுதகலசத்துக்குத் துணையாகவந்த நீர்த்திவலைகளும் ரத்தினங்களும் உபமேயங்களாகவும், பிரதான உபமேயத்துக்குத் துணையான நக்ஷத்திரங்கள் உபமானங்களாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன"

உதயமாகும் சமயத்தில் சந்திரன் சிவந்து தோன்றுதலால் செம்பொற் கலசம் உதயசந்திரனுக்குப் பொருத்தமான உபமானம். வெண் சந்திரனென்றது உதயகாலத்துக்குப் பிந்திய பெரும்பான்மையான காலத்தில் உள்ள நிறம்பற்றியென்க.

123. வண்டாய் அயன்நால்மறைபாட,மலர்ந்த(து)ஒருதாமரைப்போது,
பண்டு ஆல்இலையினமிசைக்கிடந்து பாரும்நீரும் பசித்தான்போல்
உண்டானஉந்திக்கடல்பூத்த(து)ஓதக்கடலும்தான்வே(று)ஓர்
வெண்தாமரையின்மலர்பூத்த(து)ஒத்த(து)ஆழிவெண்திங்கள்.

இ - ள். முன் காலத்தில் ஆலிலைமேற் பள்ளிகொண்டு பசித்தவன் போலப் பூமியையும் கடலையும் உண்ட திருமாலின் நாபியாகிய கடலானது, பிரமன் வண்டுபோன்று (அதன் ரீங்காரம் போல) வேதங்களைப் பாடாநிற்க, ஒரு(செங்)தாமரைப்பூப்பூத்தது (என்று) கடலும் வேறொரு வெண்டாமரைப்பூப் பூத்ததை ஒத்தது கடலிற் (பிறந்த) சந்திரன்.

ஆய் - போன்று. மலர்ந்ததொரு தாமரை எப்போது மலர்ந்ததாகிய ஒரு தாமரைப்பூவை. நீர் - கடல். உந்தி - கொப்பூழ். ஓதம் — அலை (ஐங்குறுநூறு அரும்பதவுரை). ஆழி - கடலில் (பிறந்த); 2. வட்டவடிவமான.

'தாமரைப்போது' என்றதற் கியைய அதனிற் றோன்றிய பிரமனை 'வண்டு' என்றும் வண்டு ரீங்காரம் செய்தல் போல 'அயன் நால்மறை பாட' என்றும் பூமியை யுண்டதற்கும் பொருத்தமாக (இயல்பிலே பசியில்லாதவனைப்) 'பசித்தான் போல்' என்றும் ஒருகடல் ஒருதாமரைப் பூப்பூத்ததை நோக்கி மற்றொரு கடல் தானும் அதுபோலப் பூப்பெனென்று 'வேறோர் வெண்டாமரையின் மலர் பூத்தது, என்றும் பலவகை நயம்படக்கூறினர். (தொடரும்)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

உ

# புரூரவசரிதை.

(௪0-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## மக்கட்பிணியுறுபடலம்.

அன்றுமன்னவன்சென்றவருஞ்சுர
மொன்றுதன்மையுரைப்பதெனாச்சிசே
ரென்றுமந்நிலவெப்பினுக்கிரமாய்
நின்றியங்குமோர்சாய்கைநிகர்க்குமே. (௧)

விரியுமந்நிலந்தாங்கியவெம்மையை
யாவினுக்கிறையாற்றலனாகியே
கரியவெவ்வழல்வாய்வழிகான்றிட
வுருகியெந்தவுலகுமெரிப்பதே. (௨)

நீறுதுன்றுமந்நீணிலமேன்மையை
யாறுகின்றநிழலென்றருணமா
வேறுசெல்லிடமின்றிவிரிசிறைப்
பாறுசெல்லுநிழல்வழிப்பற்றுமால். (௩)

படவராவந்நிலத்தழல்பாயவெந்
துடலம்வெம்புரிவெந்தனவொக்குமாற்
சுடிகைவெங்கணாகருந்தோன்றிடும்
விடரின்மும்மதவேழமும்வீழுமால். (௪)

காரையிண்டைமுட்கள்ளிமராவிடத்
தேரைவன்னிவிளாமுதிர்தேறுவேய்
சூரைபுன்குபொன்பாவையுந்தூர்முத
லீரமின்றியெரிந்துகரிந்திடும். (௫)

அவ்வழற்பொலிகானிடையண்ணலுஞ்
செவ்வியுற்றசிறார்களுஞ்சென்றனர்
வெவ்வெயிற்குமெலிந்துநலிந்திடா
தவ்வயிற்புயறன்னிழலாக்கிற்றே. (௬)

எரியில்வெந்துமுரிந்தனவிந்தனந்
தெரியல்வேந்தன்றெரிந்துபிறக்கியே
பரியகட்டொன்றுசேர்த்தனன்பாலருக்
குரியதாஞ்சிறுசும்மையுஞற்றியே. (எ)

மக்கள்சென்னிமணிமுடியோவெனத்
தொக்கவிந்தனச்சும்மைகள்சூட்டியே
சக்கரத்தலைமைத்தனிநாயகன்
மிக்கவிந்தனந்தானுமிலைச்சியே. (அ)

வேறு.

மைந்தர்காளொல்லைவருதிரெனச்சுமக்கு
மிந்தனமுங்கொண்டுதிரும்பியவனெய்துதனு
மந்தமனையிலடைக்கலமாய்ப்புக்கிருந்த
கந்தமலர்க்கூந்தற்காந்தைதனைக்கண்டிலனால். (௯)

நொய்யநுழைதுசுப்புநோனாகவீங்குழலைத்
தையலெவர்கொலெனத்தானேவிறவுகனு
மையல்வணிகன்மரக்கலத்தின்பாலேற்றிக்
கொய்யுமலர்க்குழலைக்கொண்டகன்றானென்றனரால். (௧0)

என்றமொழிதன்னிருசெவியிற்கேளாமுன்
சென்றதுயிருடம்பைத்தீர்ந்துயிர்ப்புந்தீர்ந்ததான்
மன்றிலெவர்க்குமொருதம்பமெனும்வாய்மையினா
னன்றுமெதிர்ந்தவர்க்கோர்தம்பமெனலாயினான். (௧௧)

நெக்கவுயிரிவ்விடையினீங்கலறனன்றெனவே
புக்கதெனமீட்டுமுயிர்க்துப்பொருமினான்
மிக்கவுளமுமுடம்புமிகநடுங்கு
மக்கடமைத்தழுவிவாய்திறந்துமாழ்கினான். (௧௨)

தருமச்சரக்கறையேகற்பின்றழற்பிழம்பே
பெருமைத்திருவின்றிருவனையபெண்ணமுதே
யிருமைக்குமெம்முயிருக்கின்பம்பெறவளித்த
வருமைப்புதல்வர்துயராரேயோவாற்றுவார். (௧௩)

கொற்பிரியாவைவேலின்கூர்விழியாய்பங்கயத்தோ
னறபிரியசசொாளியாகமௌச்செயதிலனெ
பெற்பிரியாவன்றிலிணைபிரியாவாறேய்ந்த
நிற்பிரியினுவிநிலேநில்லாது நீங்காதே. (௧௪)

பந்தவினையின்பகுதியெனவேயெதிர்ந்து
வந்தவணிகன்மனையிடத்திற்புக்கிருந்தவ்
வந்திநிறத்தானணிமவுலிமேலிருந்த
விந்துகுலததுக்கி பூக்குலைத்துக்கொண்டதென். (௧௫)

வாயிழந்தவுண்ணீர்மடையிழந்தகண்ணீரு
மாயுழந்ததாதைபவலத்தழுந்துதனு
நோயுழந்நநெஞ்சினராய்த்தந்தைமுகநோக்கித்
தாயிழந்தகன்றிற்றனயருமங்கேகினர். (௧௬)

கண்டவனைவோருமாற்ருதுகண்கலுழ
வண்டமருந்தாமாாபன்மக்கள்விழிநீர் துடைத்துப்
புண்டரிகனிட்டபொறியிதெனப்புநதிதெளிந்
தெண்டருமிவ்வேந்தற்கியயபுவனென்றேகினன். (௧௭)

அவ்வேந்தன்வைதருமவைகாணப்பெற்றிலனல்
நொவ்வேந்துநெஞ்சினெடுநோக்கினனுக்கரிய
விவ்வேந்தனுட்டிலிருப்பதறனன்றெனவே
தெவ்வேந்தர்போற்றுந்திறல்வேந்தன்போயினன். (௧௮)

போனன்மறுகாம்புக்கப்பொருகளிற்று
வேனறசெங்கைவிறல்வேந்தன்வெய்யவன்றன்
வானறிலதசமறைக்குந்தருநிரந்த
கானறுநண்ணினன்மக்களையுங்கைப்பிடித்தே. (௧௯)

வேறு.

மைந்தர்காள்கடிதேகிவருதிரென்
றந்தவாளுழவன்செலுமாயிடை
முந்தைநாளின்வினைப்பயனல்முகி
றந்துவீசினதாங்கருந்தாரையே. (௨0)

வீசுகின்றவிடாமழைத்தாரையா
லாசைவெள்ளமனைத்துமொன்றாகியே
யேசின்மன்னவனேகும்வழியிடை
யோசையாறுபெருக்கொடுலாயதே. (௨௧)

மலைபுரட்டிமரங்களைவேரறத்
தலைபுரட்டித்தடங்கரைதள்ளிவான்
விலைபுரட்டிவிளங்குமணிக்குவை
யலைபுரட்டிப்பெருகியதாறரோ. (௨௨)

ஆற்றின்வான்கரைமேவியரும்பெறன்
மாற்றிலாநிதிபோலுயர்மக்களை
யேற்றுவார்பிறரின்மையினுலிகற்
கூற்றுலாயவேன்மன்னவன்கூறுவான். (௨௩)

அகாதநீரினளவறிந்தேகுது
மகார்கணில்லையினென்றேமறிநீரிடைத்
தகாததுன்பந்தரிக்கிலனாகியே
புகாதமுன்னம்புதல்வர்முனபோதுவார். (௨௪)

போந்தமைந்தரில்மூன்னைப்புதல்வனை
வேந்தனில்லெனமற்றவ்விடலையை
யேந்தியேகவிருந்தபுதல்வனுஞ்
சார்ந்துசெல்லுந்தனிமைபொறுமலே. (௨௫)

இனையராகியமைந்தர்க்கினிச்செயும்
வினையம்யாதெனத்தன்னுள்வினவியே
வனையும்வன்கொடியாலொருமைந்தனைச்
சினைசெய்பாதவந்தன்னொடுஞ்சேர்த்தினன். (௨௬)

பின்னையோரிளம்பிள்ளையைப்பேரெழிற்
றன்னதாரணிதோண்மிசைதாங்கியே
யன்னநீரையரிதினினீந்திப்போய்
மன்னுமற்றக்கரையினில்வந்தரோ. (௨௭)

அப்பனேயவ்வருந்துணையண்ணலை
யிப்புறத்தெடுத்தேகுறுங்காறுநீ

தப்பிடாதிவணில்லெனத்தன்மன
வெப்பறுமையவ்வேந்ததைத்தொடர்தலும். (உஅ)

அக்கரைப்பெருமைந்தனலறிட
விக்கரைக்குமோர்மைந்தனையேங்கிடச்
சிக்கெனப்பெருந்தாருவிற்சேர்த்திறன்
புக்கவூழின்வினைவழிப்புந்தியான். (உகூ)

மீண்டுமந்தவிடலைதனையெடுத்
தீண்டுபோதுதற்கெண்ணியிறங்கியே
நீண்டதோளவனீந்தினனீந்தலுந்
தூண்டும்வல்வினைப்பவ்வஞ்சுழித்ததே. (௩0)

சுழித்தநீரிலமிழ்த்தினதத்திமே
லெழுத்தியுய்த்தனவீர்த்துப்புரட்டின
தழைத்ததூற்றிடைச்சாடினநீடிய
நிழற்குடைப்பிரான்றன்னையங்நீத்தமே. (௩க)

உந்துதெண்டிரைமோதவுணர்வொழிந்
திந்தியங்களுந்தன்மையிழந்திடக்
கந்தடுங்களிற்றுத்தனிக்காவலன்
வந்துசேர்ந்தனனுங்கொர்மருங்கினே. (௩உ

அம்மருங்கினணிதிரிகர்த்தமாம்
வெம்மைமாநகர்சேர்ந்தவவ்வேந்தர்கோன்
றன்மைநிற்கத்தருவொடுஞ்சேர்த்திய
செம்மைமைந்தர்கள்செய்தியியம்புவாம். (௩௩)

மக்கட்பிணியுறுபடலம் முற்றும்.

---

## கும்பப்படலம்.

---

இழுக்காவறத்துத்திறல்வேந்தனிறங்கிநீந்துமேல்வையினி
லொழுக்காறிழுத்துக்கொண்டேகவுள்ளந்தெரியாதுடன்போந்து
விழக்காதலித்துநெக்காதவிசியாற்சிறிதங்குயிர்பிழைத்த
குழைக்காதலரங்குறுதுயரமெம்மாலுரைக்கக்கூடாதே. (க)

மனையுமிழந்து நகரிழந்து வளநாடிழந்து மன்னறத்தின்
வினையுமிழந்து குலமிழந்து மேன்மையிழந்து மெய்யுயிரா
மனையுமிழந்து செயலிழந்து வருசானிடையோராற்றிலைபன்
றனையுமிழந்த தனயர் துயரெம்பாலுரைக்கத்தகாதன்றே. (௨)

ஐயன்போனான்போனானென்றலறுமன்னேயன்னையெனு
மெய்யிற்றுணையாமெம்பியிங்குவாராய்வாராய்வினவவெனுங்
கையுமுடம்பும்பிணியவிழ்ப்பார்க்காணேன்காணேனெனக்கசியுஞ்
செய்யுஞ்செயல்யாதெனச்சிரத்தைமாத்திறபுடைக்குமொருசெம்மல். (௩)

கண்ணாலருவிக்கடல்பெருகக்கையுமுடம்புமிகநடுங்க
வண்ணாவண்ணாவென்றழைக்குமையனெவண்சொலடைந்ததென்னு
மண்ணாடிழந்துவிண்ணடைந்தான்கொல்லோநம்மைமறந்ததென்னு
முண்ணாவுலரவெம்பிமரத்தொடுநின்றழுங்குமொருகாளை. (௪)

நல்லாள்போனகடற்றுறையினண்ணநயந்தயப்பென்னு
மெல்லாமொழிந்தவழுக்காற்றையிவ்வாறழுழிக்கிற்றேருவென்னுங்
கல்லாமைந்தர்போனறுமெனத்தொடாதொழிந்தகருத்தென்னு
நில்லாவுயிரைத்துனபவழிப்படுத்துமொருகான்முளைநின்றே. (௫)

சிந்தாகுலந்தீர்த்தருளுமன்னைதிரைவாரிதிக்கேயிரையாக
நந்தாதெம்மைநனிபுரக்குநீயுநதிக்கேநடந்தேக
வந்தாயரசர்முடிவணங்கவரியாசனத்தினரசிநக்கு
மெந்தாயார்க்கோவாளாகியிருக்கவுயிர்கொண்டிருக்கின்றேம். (௬)

என்றுபலவும்பன்னியழுதிரங்கியாற்றினிருமருங்கு
மொன்றின்முகத்தையொன்றுபார்த்துயிர்நெக்குருகுமமயத்துத்
துன்றுதிரைவாரியினவீழ்ந்துகரைகாணார்க்குத்தொல்வினைபி
னன்றிப்பெருமாக்கலனுய்த்ததென்னவொருவனண்ணினான். (௭)

வேறு.

பெருகுதண்புனலாற்றின்மாய்பெருங்கரைமருங்கே
பருமாத்தொடுநின்றவம்மைந்தரைப்பார்த்தான்
றருமமன்னவர்குலத்தவர்போலுமித்தனயர்
இருமாத்தொடுநின்றதென்காரணமெனவே. (௮)

கொன்றைவாய்ந்தவேய்ங்குழலுடைக்கோவலர்கோமான்
கன்றவீக்கியகட்டொடிங்கண்ணினீரோடு
நின்றமைந்தனையாவனீகட்டியநிபமென்
ஒன்றுகூறெனக்சோமகன்கோமற்குரைப்பான். (கூ)

தந்தைபோலுநீகேட்டியத்தம்பியும்யானு
மெந்தையோடுவேற்றார்புகுந்திடவிரைந்திங்ஙன்
வந்தவேலையிலாற்றுநீராதமாய்வரலுஞ்
சிந்தைவேறுபட்டேயெந்தையொருமொழிதெரித்தான். (க0)

இளவறன்னையுமென்னையுநோக்கியிவ்வாற்றி
னளவறிந்தியாமீள்குது நின்மினென்றைய
வுளமிபைந்திலங்கலுழ்ந்தனமாயிடையுரவோய்
துளைசெய்தானிந்தமரத்தொடுங்கொடியினுற்றந்தை. (கக)

எம்பியைக்கொண்டுநீந்தினனக்கரையிவர்ந்தான்
நம்பிநிற்றியவ்வண்ணலைத்தாவெனநவில
வெம்பியாங்கவன்றொடர்ந்திடப்பொருமலவ்வேந்தன்
கம்பமுற்றிடவன்னவன்றன்னையுங்கட்டி. (கஉ)

இறங்கியென்னையுமெடுத்துக்சொண்டேதுவானீந்தக்
கறங்கதெண்டிரையாற்றுநீரமூவத்துட்கலந்த
திறங்கொளெந்தைபைக்கண்டிலனெனப்பெருஞ்சிரத்தை
வறைந்தவம்மரத்தோடறைந்தாதுலித்தழுதான். (கங)

அழுதிரங்கிநின்றிபம்பலுமாயர்தங்கோமான்
மழலைமைந்தனைவநந்தன்மினெனப்பிணியாற்றித்
தழுவிமெய்பெலாந்தைவந்துதடங்கணீர்துடைத்து
முழுதுணர்ந்திடப்பின்னருமொருமொழிமொழிவான. (கச)

அருந்தவத்தினிற்பெற்றுவனியம்புவையனையா
ரிருந்ததெவ்வயினின்னையர்நாமமேதிங்ஙன்
பிரிந்ததுப்பிபேர்யாதெனப்பெரியவன்வினவப்
பொருந்தலார்தொழுங்கழன்மகன்றலைமகன்புகல்வான். (கரு)

வேறு.

அன்போடுறையும்பதிரேகிட்டானமெனுமோரணிநகரம்
பொன்போலியவெனன்னைபெயர்புண்டரீகவல்லியென்பா
டன்போலில்லாப்புரூரவாவென்னுமொருவன்றந்தைதன்ற
வென்பேரமோக்கதனிளவல்கனகாங்கதனென்றியம்பினன். (கசு)

ஆரேயெனினுங்கிடக்கநிற்கவாட்டின்பாலுமடிசிலுநன்
னீரோடளிப்பன்வருதிர்கொல்லோவென்னவவனுநேர்ந்திடலும்
பேரோதையின்மண்ணுறுநதியக்கரையிற்பிணித்தபிள்ளையுங்கொண்
டோரோடுற்றுன்கும்பனெனுமாயர்குலத்திலூரவோனே. (கஎ)

ஆற்றினகன்றதிருத்தாதையுருவமாறிப்வ்விடையன்
வேற்றுவடிவங்கொண்டெதிர்ந்தானென்னவியந்துமெலிவகன்றூர்
பொற்றுமாசர்குலக்குமரர்புதல்வரிவரேயெனப்புரப்ப
மாற்றமறியாமைந்தரவன்மைந்தராகவளர்கின்றூர். (கஅ)

இடையர்குலத்துச்சிறூர்விளையாட்டியற்றூர்தம்மிலிருவோரும்
படைகள்பயிற்றல்கரிபரிதேர்நடத்துமியற்கைபலபயிற்றல்
அடையலாற்செற்றிடுதிறங்களெண்ணலெழுதலாதிடா
யுடையசெயலேவிளையாட்டாய்விழைவாரந்தவுரவோரே. (கக)

இற்றையறிந்தேயன்னவர்கட்கெவைவேண்டுவனவவையெல்லாங்
கற்றல்புரிவித்திடப்பயங்கொளனம்போலவருங்கற்றுணரக்
கொற்றவரசர்குலக்குமரர்குறிபோன்றுளரிக்குமரரென
முற்றுமுணர்ந்தேமைந்தரினுவளர்த்தான்முல்லைமுதலோனே. (உ0)

சிந்தைகளிப்பத்துயரொளிப்பச்செழுந்தார்முல்லைக்கும்பனிடை
மைந்தரடைந்ததன்மையினைவகுத்தோந்திரைமண்ணுறுநதியின்
முந்தைவினையின்பதுபிறங்கிநீந்தமுடிந்தான்போ
லுந்தபெருநீரோடுஞ்சென்றூன்றன்மையினிமேலுரைசெய்வாம். (உக)

கும்பப்படலம் முற்றும்.

(தொடரும்.)

உதவிப்பத்திராதிபர்.

# களப்ரரும் சங்ககாலமும்.

கே. ஜி. சங்கரன்.

செந்தமிழ்த்தொகுதி 21 பக்கங்கள் 256–260-ல் ஸ்ரீ மு. தம்பையா அவர்கள் நான் களப்ரரைக்குறித்தும் சங்ககாலத்தைக்குறித்தும் எழுதியவற்றை மறுத்திருக்கிறார்கள். என் கருத்து உண்மையைத் தெளிந்து வெளிப்படுத்துவதேயாகையால் அவர் கூறுவதை ஆராய்ந்து ஒப்பமுடிந்தவைகளை ஒத்துக்கொண்டும் மறுக்கவேண்டியவைகளை மறுத்தும் இங்கு சிறிது எழுதத்துணிந்தேன். இதை வாசிக்கும் நண்பர்கள் இதையும் முடிவுரையாகக் கொள்ளாது நன்காராய்ந்து முடிவுரை கூறவேண்டுமென்பதே என் விண்ணப்பம்.

முதலில், வேள்விக்குடிச்செப்பேடுகளில் வரும் "அளவரிய ஆதிராசரை அகலநீக்கி அகலிடத்தைக், களப்ரனென்னுங் கலியரைசன்கைக் கொண்டதனை இறக்கியபின்" என்ற வரிகளுக்கு "பாண்ட்யரை அகல நீக்கி, களப்ரவரசர்கள் அகலிடத்தைக் கைக்கொண்டு வேள்விக்குடியை இறக்கியபின்" என்று பொருள்கூறி, பாண்ட்யரை நீக்கியபின் பலகளப்ரர்கள் ஆண்டனரென்றும், அவர்கள் இறக்கியது வேள்விக்குடியேயென்றும், அவர்களை நீக்கியது கடுங்கோனல்லவென்றும், தம்பையா அவர்கள் வரைந்துள்ளார்கள்.

இவற்றில், இறக்கப்பட்டது வேள்விக்குடியே என்று நானும் இப்பொழுது ஒத்துக்கொள்கிறேன். ஆனால், பாண்ட்யரை அகலநீக்கியவன் களப்ரன் என்றிருப்பதால், பல களப்ரர்கள் ஆளவில்லையென்றும், கடுங்கோனே வெளிப்பட்டுத் தன்னாட்டை மீண்டும் பெற்றதாக கூறப்படுவதால், அக்களப்ரனை நீக்கியது கடுங்கோனே யென்றும் துணியப்படும். ஆகையால், என் முடிவுகள் ஒன்றும் சிறிதும் அசைக்கப்படவில்லை யென்று தெளிவாம். "களப்ராலிறக்கப்பட்டது" என்ற மொழிகளிலும் வேள்விக்குடியை இறக்கியவன் ஒருவனேயாகவேண்டுவதால், களப்ரரைப் பன்மையாகக்கூறியது அவர்குலத்தைக் குறித்ததாகும்.

இனி, செப்பேடுகளிற் கூறப்படும் பாண்ட்யர்களின் காலங்களையும் தம்பையா அவர்கள் தாக்க முயன்றார்கள். அவர்கள் எழுதியிருப்பதிலிருந்து, இச் செப்பேடுகளுக்கு நான் எழுதியிருந்த முகவுரையை

அவர்கள் படிக்கவில்லையென்று தெளிவாகிறது. ஆனைமலைச்சாஸனத்தி லிருந்து ஜடிலவர்மன்காலத்தையும், தலைமுறைக்கு 25ஆண்டுகள் வீதம் கொடுத்து அவன் முன்னவர்கள் காலங்களையும் நான் நிர்ணயித்திருக்கி றேன். செப்பேடுகளில் நெல்வேலியில் வென்றதாகக் கூறப்படும் மாறவர் மன் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இருந்தவன். சம்பந்தரால் சைவனுக்கப் பெற்ற நெடுமாறநாயனாரும் நெல்வேலியில் வென்று 7-ஆம் நூற்றாண்டி லேயே இருந்தவர். ஆகையால் இருவரும் ஒருவரேயாகவேண்டும்.

சம்பந்தர் காலத்தையும் தம்பையா அவர்கள் தாக்கமுயன்றார்கள். ஆனால், அப்பர் பல்லவன் முதலாவது மஹேந்த்ரன் காலத்திலும், சம் பந்தர் நெடுமாறன்காலத்திலும், சிறுத்தொண்டர் முதலாவது நரஸிம்ஹ வர்மன் காலத்திலும் இருந்தார்களென்றும், நெடுமாறன் நெல்வேலியி லும், சிறுத்தொண்டர் வாதாபிலும் வென்றதால், இவர்கள்காலம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டேயென்றும் நன்குநாட்டப்பட்டிருக்கிறது. புறநானூறு 166ல் சம்பந்தர் குறிக்கப்பட்டிருப்பது உண்மையாயின், புறநானூறு கி.பி 7-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதென்றே முடிவுகூறவேண்டும்.

இம்முடிவை வலியுறுத்தும் செய்தியொன்று மணிமேகலையில் காணக்கிடக்கிறது. இந்நூலில் குச்சரக்குடிகையென்ற சிற்றில் இரு முறை கூறப்படுகிறது. இதற்கு மஹாமஹோபாத்தியாய ஸ்வாமிநாத ஐயரவர்கள் குர்ஜரதேசத்துப் பணியமைந்த ஒரு சிறு கோயில் என்று பொருள் கூறுகிறார்கள். ஆயினும், சிலர் இதுவல்ல பொருள்என்றுகூறி, குச்சரம் என்ற பதம் குத்தரம் என்றதன்மரூஉவாய் இருக்கலாம் என்கி றார்கள். இது தவறென்பது தெளிவாம். வடமொழியில் குத்ரம் என் றிருப்பது குத்திரம் என்றே தமிழிலாகும். குத்தரம் அல்ல. நிகண்டு களிலும் குத்திரமென்றே காணப்படுகிறது. குத்திரம் குச்சரமாக மாறி யிருப்பதற்கு வேறுசான்றொன்றுமில்லை. மேலும் குர்ஜரதேசம் சிற்பத் தில் பெயர்பெற்றிருப்பதை Encyclopaedia Brittanicaவில் Indian Architecture என்றவ்யாஸத்தைப்படித்தறியலாம். குர்ஜரர்கள் இந்திய சரித்ரத்தில் முதன்முதற்கூறப்படுவது கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலேயே ஆதலாலும், அவர்கள் ப்ரமுகர்களானபிறகே அவர்களின் சிற்பப்பணிகள் தென்னாட்டிலும் பரவியிருக்குமாதலாலும், குச்சரக்குடிகையைக்கூறும் மணிமேகலைநூல் கி. பி. 6 ஆம் நூற்றாண்டிற்குப்பிறகே இயற்றப்பட் டிருக்கவேண்டும். சங்ககாலமும் 6, 7-ஆம் நூற்றாண்டுகள் ஆகவேண்டும்.

உ

# பெருமிழலைக்குறும்ப நாயனாரது திருப்பதி.

சிவனடியார் அறுபத்துமூவருள் ஒருவராகிய பெருமிழலைக்குறும்ப நாயனார்வாழ்ந்து வீடுபேறெய்தியதிருப்பதி பெருமிழலை யென்பது திருத்தொண்டர்புராணம்படித்தோர்யாவரும் நன்கறிந்த தொன்றாம். இஃது இங்ஙனமாக, சைவசமயாசாரியர்களால் பாடப்பெற்றதும் திருஞான சம்பந்தருக்கும் திருநாவுக்கரசருக்கும் படிக்காசு அருளப்பெற்றது மாகிய திருவீழிமிழலை யென்னும் திருப்பதியே இந்நாயனாரது பெருமிழலையெனக்கொண்டனர் பிற்காலத்தினர். ஆதலால் இத்திருப்பதிகளிரண்டும் ஒன்றோ? அன்றி வேறோ? வேறாயின் பெருமிழலை யாண்டையது? என்பவற்றை ஆராய்வாம்.

சுந்தரமூர்த்திகள் அருளிய திருநாட்டுத்தொகையிலுள்ள 'மிழலை நாட்டுமிழலையே வெண்ணிநாட்டுமிழலையே' என்றவடியால் மிழலை யென்னும் பெயருடைய திருப்பதிகள் இரண்டு உண்டு என்பது வெளியாகின்றது. அன்றியும், இவ்விருமிழலைகளுள் ஒன்று மிழலைநாட்டிலும் மற்றொன்று வெண்ணிநாட்டிலும் இருத்தல்வேண்டுமென்பது அவ்வடியாலேயே அறியப்படுகின்றது. ஆசிரியர் சேக்கிழார் நமது பெருமிழலைக் குறும்பநாயனாரது திருப்பதி மிழலைநாட்டிலுள்ள பெருமிழலையென்று மிகத்தெளிவாய்க் கூறியுள்ளனர். அதனை,

சூதநெருங்குகுலைத்தெங்குபலவுபூகஞ்சூழ்புடைத்தாய்
வீதிதோறுநீற்றினொளிவிரியமேவிவிளங்குபதி
நீதிவழுவாநெறியினராய்நிலவுங்குடியானெடுநிலத்து
மீதுவிளங்குந்தொன்மையதுமிழலைநாட்டுப்பெருமிழலை. [1]

என்ற பாடலாலுணர்க. அன்றியும் அவ்வாசிரியர், வீழிமிழலையை மிழலைநாட்டிலுள்ள திருப்பதியென்று யாண்டுங் குறிப்பிடவில்லை. ஆத

1. பெரியபுராணம்—குறும்பநாயனார்புராணம்—1.

லால், அவர் வீழிமிழலையும் பெருமிழலையும் வெவ்வேறு திருப்பதிகள் என்றே கருதியுள்ளாரென்பது ஒருதலை. எனவே, சுந்தரமூர்த்திகள் கூறியுள்ள மிழலைநாட்டு மிழலையும் வெண்ணிநாட்டுமிழலையும் முறையே பெருமிழலையும் வீழிமிழலையுமாயிருத்தல்வேண்டுமென்பது நன்கு துணியப்படும். ஆகவே, இவ்விரண்டும் வெவ்வேறு திருப்பதிகளே யாம். இங்ஙனமே, ஆனாயநாயனாரது மங்கலமும்[2] ஏயர்கோன்கலிக் காமநாயனாரது பெருமங்கலமும்[3] அரிவாள்தாயநாயனாரது கணமங் கலமும்[4] பொதுவாக மங்கலமெனப்படினும், வேறுவேறு திருப்பதி களாயிருத்தல் ஈண்டு அறியத்தக்கது. இத்துணையுங்கூறியவாற்றால் பெருமிழலைக்குறும்பநாயனாரது திருப்பதி வெண்ணிநாட்டு வீழிமிழலை யனறென்பதும் மிழலைநாட்டுப் பெருமிழலையேயாமென்பதும் இனிது புலப்படும்.

இனி மிழலைநாட்டிலுள்ள பெருமிழலை எவ்விடத்துள்ளதென் பதைத் துருவிநோக்குவாம். வளநாட்டின் உட்பிரிவு நாடு அல்லது கூற்றமெனப்படும் என்பர் கல்வெட்டு ஆராய்ச்சியாளர். எனவே, மிழலை நாட்டை மிழலைக்கூற்றமெனினும் பொருந்தும். மிழலைக்கூற்றம் கடலைச் சார்ந்துள்ளதொருபகுதியென்று 24 ஆம் புறப்பாட்டு அறிவிக்கின்றது. இம்மிழலைக்கூற்றம், கடைச்சங்கநாளில் வேளிரது ஆட்சிக்குட்பட்டிருந் தது. அக்காலத்தில் இதனை ஆட்சிபுரிந்தவர்களுள் வேள் எவ்வியென் பானும் ஒருவன்[5]. அவனது தலைநகர் நீடூர் என்பது[6]. நாகபட் டினத்தைச் சார்ந்த வைப்பூரும் அவனுக்குரியதென்று அகநானூற்றுப் பாடலால் தெரிகிறது[7]. நீடூர்மாயூரத்திற்கண்மையிலுள்ளதொரு திருப் பதி. சைவசமயாசாரியரால் பாடப்பெற்றது. ஆகவே, திருநீடூர், மாயூரம், வைப்பூர், நாகபட்டினம் முதலான நகரங்களைத் தன்னகத்துடைய தாய்ச் சோழநாட்டிற் குணகடலைச்சார்ந்துள்ள பகுதியே மிழலைநாடென்று கூறப்பட்டதென்க. இஃது, ஒருகாலத்தில் தன்பெயர்கொண்டு பெருகி

2. பெரியபுராணம்—ஆனாயநாயனார்புராணம்—7.
3. ஷை ஏயர்கோன்கலிக்காமநாயனார்புராணம்—1.
4. ஷை அரிவாள்தாயநாயனார்புராணம்—1.
5. புறநானூறு—24.
6. அகநானூறு—266.
7. ஷை 126.

ஆளுடையார்கோயிலெனப்படும் திருப்பெருந்துறை, திருப்புனவாயில் முதலான திருப்பதிகளையும் புதுக்கோட்டை ராஜ்யத்தின் ஒரு பகுதியையும் தன்பாலடக்கிக்கொண்டு விளங்கியது என்பர் சரித்திர நூல்வல்லார். இம்மிழலைநாட்டிலுள்ள மாயூரத்திற்கு மேற்கில் 12 மைல் தூரத்தில், கும்பகோணத்திலிருந்து சென்னைக்குப் போகும் பெருவழிக்கருகில் மிழலை என்ற திருப்பதி யொன்றுளது. யாம் நேரிற் சென்று அதனைப்பார்த்தபோது அழிவுற்ற நிலையிலுள்ள ஒருபழைய சிவாலயம் அங்கேகாணப்பட்டது. எக்காரணத்தாலோ அச்சிவாலயமும் அதனைச்சூழ்ந்துள்ள ஊரும் அழிந்துபோய்விட்டன. அங்கிருந்தோர் அதற்கருகிலுள்ள களம்பரம் என்ற ஊரிற் குடியேறியுள்ளனர். மிழலையும் அதிலுள்ள சிவாலயமும் பழையகாலத்தில் நல்ல நிலையிலிருந்திருத்தல்வேண்டும். அழிவுற்ற அவ்வாலயத்திலுள்ள படிமங்கள் அதில் ஒருபுறத்தில் புதியதாக அமைக்கப்பெற்றுள்ள ஒரு சிறு அறையுள் வைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டுவருகின்றன. அவ்விடத்திற் பெருமிழலைக்குறும்பநாயனாரது படிமம் இன்றும் உளது. அஃது உருத்திராக்கமாலையுடன் சடைமுடியுடையதாய்க் காணப்படுகின்றது. ஆகவே, பெருமிழலைக்குறும்பநாயனாரது திருப்பதியாகிய பெருமிழலை, மிழலைநாட்டிலுள்ள மிழலையே யாதல் அறிந்துகொள்க.

**T. V.** சதாசிவபண்டாரத்தார்,
தலைமைத்தமிழ்ப்பண்டிதர்,
வாணாதுறை ஹைஸ்கூல், கும்பகோணம்.

உ

# ஸம்ஸ்க்ருத வ்ருத்த மஞ்ஜரீ.

(௬௪௪-ஆம் பக்கத் தொடர்ச்சி)

**21. ப்ராக்ருதி.**

3. மத்தா. (விலாஸினி)=29 மாத்ரா.

=பபப பபப ர

= { ஞநந ஞநந
ஞநந ஞநந
ஞநந ஞநந—ஞநஞ

**22. ஆக்ருதி.**

1. ப்ரபத்ரகம் (30)=பர நர நர நக

= { ஞநநஞ
நஞ ந நநஞ
நஞ ந நநஞ
நஞ ந நநஞ

2. ஹம்ஸீ (32)=மமதநநநஸக

= { ஞஞ ஞஞ=கன்யா } வித்யுன்மாலா
ஞஞ ஞஞ
நநநந நநநந
நநநந ஞஞ =சசிவதநு.

{ காலம் தீயே
பத்மா ரண்யே
பவனப தனபரி
தரளய ராகே

**23. விக்ருதி.**

1. அத்ரிதநயா=அச்வலளிதா=30.

=நஜபஜபஜபலக.

= { நநந நஞந
ஞநந நஞந
ஞநந நஞந
ஞநந நஞ

2. மயூரகதி =(32)=பபபபபபபபகக

= { ஞநந ஞநந
ஞநந ஞநந
ஞநந ஞநந
ஞநந ஞஞ } தோதகம்

{ பற்றில னீசனும்
முற்றவு நின்றனன்
பற்றிலை யாயவன்
முற்றி லடங்கே } வஞ்சித்துறை கோயில்திருவாய்மொழி (செஞ்சுருட்டி)

3. மத்தக்கீரீடா (32)=மமத நநநந லக

= { ஞஞ ஞஞ
ஞஞ ஞஞ
நநநந நநநந
நநநந நநஞ } சசிகலா

24. ஸம்ஸ்கிருதி (ஸங்க்ருதி)

தந்வீ. (32) பத நஸ பப நய

{ ஞநந ஞஞ=பங்க்தி
நநநந நநஞ
ஞநந ஞநந
நநநந ஞஞ=சசிவதனா }

25. அதிக்ருதி.

க்ரௌஞ்சபதம் (32)=பம ஸம நநநந க

= { ஞநந ஞஞ=பங்க்தி
ஞநந ஞஞ } சம்பகமாலா
{ நநநந நநநந
நநநந நநஞ } சசிகலா

26. உத்கிருதி

1. ஆக்யா (32) பநநந நநநஸ க க

ஞஞ ஞநந
நநநந நநநந
நநநந நநநந
நநஞ ஞஞ

2. புஜங்கவிஜ்ரிம்பிதம். (38)

=மமத நநந ரஸலக

ஞஞ ஞஞ
ஞஞ ஞஞ } 8
நநநந நநநந நநஞ 11
நஞந நஞந ஞ 7

மந்தா ரமணீ
கானே கடலே கணமே மரமே
வானே புவியே மறையே விரையே
பானே மதியே பகரத் விதமே
மானே தேனே மலையின் மகளே.
கன்யா

தோதகம் 11/16. ஞநந ஞநந ஞநந ஞஞ
மந்தாம் வேலையில் வந்ததும் வானத்
தந்திர ஞர்பிடி யென்னலு மாஞள்

கனமட வார்தம்
சிலையத ஞலும்
கனவிளை யாலும் கரைமேலே
சசிவதஞ ஸாமதி
=நநநநஞஞ =நந ஞஞ

கஜகதி 8/10 நநநஞ நநநஞ
{ ரவிஸுதா பரிஸரே
{ விவிரதோ த்ரிவிஹரே

{ பெரியைநீ சிறியைநீ
{ பெண்ணுநீ ஆணுநீ

ஸோமராஜீ 6/10 நஞஞ நஞஞ
சாத்தே யுதித்தா
யாத்தே குதித்தே
சமர்த்தா யெதிர்த்தே —யடுஞரை.

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், B.A., B.L.,

மதுரை.

உ

# தொல்காப்பியதேவரின் காலக்குறிப்பு.

திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகமென்னும் நூல் தொல்காப்பிய மியற்றிய தொல்காப்பியரின் வேறான வொரு தொல்காப்பியதேவரென் பாரா லாக்கப்பட்டதென்னும் விவரம் மஹாமஹோபாத்தியாய பிரும்மஸ்ரீ உ. வே. ஸ்வாமிநாத ஐயரவர்கள் வெளியிட்ட அக்கலம்பகத் தின் முகவுரையா லினிது விளங்குகிறது. இக்கலம்பகத்தை நோக்கிய தன்பின்னரே "பண்பாயகலம்பகத்திற் கிரட்டையர்கள்" என்று புகழ் கொண்ட இளஞ்சூரியர், முதுசூரியரெனப்பட்ட இரட்டைப்புலவர்க ளால், சிதம்பரத்தடியார்கள் சிலர் வேண்டுகோளின்படி தில்லைக்கலம்பக மும் அதன்பின்னர், திருவாமாத்தூர்க்கலம்பகம் என்ற சிறந்த பிரபந்த மொன்றும் இயற்றப்பட்டனவென்கிற கர்ணபரம்பரைச் செய்தியொன்று தமிழ்நாவலர்சரிதையிற்* கூறியிருப்பதாயும் விளக்கியுள்ளார். அவ் விரட்டையர்களோ, பாரதம் பாடிய வில்லிபுத்தூராரை யாதரித்த வரபதி யாட்கொண்டானென்னும் பிரபுவைத் தாமும் பாடுதலாலும், வில்லிபுத் தூராருக்குச் சமகாலிகரென்று கருதப்படுகிற ஸ்ரீ அருணகிரிநாதர் தம் திருப்புகழொன்றினிறுதியில் கி. பி. 1449௵ முதல் 1465௵ வரை அரசுபுரிந்த விஜயநகரத்தரசனை ப்ரௌடதேவ மஹாராஜாவைப் புகழ்ந்துள்ளாராதலாலும், இந்நான்குநாவலர்களும் பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில்விளங்கிய கவிதிலகரென்றேற்படுகிறது.†

ஆகவே, திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகமுடையாரான தொல்காப் பியதேவர்காலம் பதினைந்தாம்நூற்றாண்டிற்கு முன்னதென்பதே தெரி யக்கிடக்கிறது.

---

* "தொல்காப்பியதேவர்சொன்னதமிழ்ப்பாடலன்றி
நல்காத்திருச்செவிக்குநாமுரைப்பதேறுமோ
மல்காப்புனறதும்பமாநிலத்திற்கண்பிசைந்து
பல்காற்பொருமினர்க்குப்பாற்கடலொன்றீந்தார்க்கே"—

தமிழ்நாவலர்சரிதை.

† செந்தமிழ், Vol. VII. பக்கம் 405.

இனி, பாதிரிப்புலியூர்க்கலம்பகத்தின் பாயிரத்து முதற்காப்புச் செய்யுளில் *சொன்னவாறறிவிநாயகரென்ற நாமம்வாய்ந்த கணநாதர் போற்றப்படுகிறுர். தஞ்சைஜில்லா நீடூர்த்தலத்தெழுந்தருளியுள்ள உமையொடுநிலாவியபெருமானுர் (அருட்சோமநாதேசுவரர்) ஆலயத்துள் கர்ப்பக்கிரகச்சுவரிற் பொறித்துள்ள குலோத்துங்கசோழனின் நாற்பத்தாருமாண்டுச் சிலாசாதனமொன்றில் † மிழலைநாட்டுவேள்கண்டன் மாதவனென்பான் அச் சோழவரசனின் முப்பத்தெட்டாமாண்டில் நீடூர்ப்பெருமாற்குக் கற்றளி விருப்புடனமைத்த செய்தி கூறப்புக்க சமயத்தில் தன்னுல் சொன்னவாறறிவார்கோயிலும் எடுக்கப்பட்டதாகக் கூறியுள்ளான். இச்சாஸனத்தில் தில்லையம்பலத்திற்கும் குறிப்புக் காணப்படுவதாற் சிதம்பரத்திற்கணித்தாயுள்ள பாதிரிப்புலியூர்க் கோயிலில்தான் இந்த விநாயகர்கோயிலும் கட்டப்பட்டிருக்கவேண்டுமென்று மேற்படுகிறது. நாற்பத்தாருண்டு அரசுவீற்றிருந்த சோழவரசன் கி. பி. 1070 முதல் 1120 வரையாண்ட முதலாம் குலோத்துங்கனைத் தவிர வேறெவருமில்லையாதலால் இச்சாதனத்தில் குறிக்கப்பட்டுள்ள சொன்னவாறறிவார்கோயில் சற்றேறக்குறைய கி. பி. 1108ஞூத்தில் அதாவது பன்னிரண்டாம் நூற்ருண்டின் துவக்கத்திலே ஏற்பட்டிருக்க வேண்டும். தானியற்றிய கலம்பகத்தில், காப்புச்செய்யுளை இவ்விநாயகருக்குச் சிறப்பாக அர்ப்பணம் செய்யவேண்டுமானுல், இக்கோயில் கட்டப்பட்டுக் குறைந்தது ஐம்பது அறுபது ஆண்டுகளுக்குப் பிறகாவது தான் தொல்காப்பியதேவர் திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகத்தை யியற்றியிருக்கவேண்டுமென்றெண்ணுவது பொருத்தமாயிருக்கிறது.

ஆகவே, தொல்காப்பியதேவர்காலம் 12-ம் நூற்ருண்டினிறுதிக்கும் 14-ம் நூற்ருண்டினிறுதிக்கும் இடைப்பட்ட காலமென்னலாம்.

**A. S. R.**

---

*பொன்னினுன்மாடமோங்கும்பாதிரிப்புலியூரைய
னென்னையாளுடையவீசன் றன்னிடத்திருந்தவோங்கற்
கன்னிமானீன்றெடுத்தகடம்பொழிகவுட்டுால்வாய்ச்
சொன்னவாறறியும்யானை துணையடிதொழுவோமியாமே.

திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகம் செய்யுள் 1.

† "கூறியவுலகனைத்தையுங்குடைக்கீழாக்கியகுலோத்துங்கசோழற் காண்டொருநாற்பத்தாறதன் இடை........சொன்னவாறறிவார் கோயிலும்............நிலாவினுன்.....................மிழலைநாட்டு வேள்கண்டன்மாதவனே."—நீடூர்ச்சாதனம்.

S. C. ... RATHA MOD... 18 DEC 1924 SHIYALI.

# மலையாளம்.

மலையாளம் என்னும் சொல் இப்பொழுது தேசத்தையும் பாஷையையும் குறிக்கின்றது. இச்சொல்லைச் சிலர் மலையென்றும் ஆழமென்றும் பிரித்து, ஆழமென்பது ஆழியென்னும் சொல்லின் திரிபுஆனதால் மலைகளினாலும் ஆழி(கடல்) யாலும் சூழப்பட்ட இடமென்று பொருளுரைக்கின்றனர். ஆயின், தமிழிலோ மலையாளத்திலோ ஆழமென்பதற்கு ஆழியென்னும் பொருள் இருப்பதாகக் காணப்படவில்லை. ஆழமுடையது ஆழி. ஆழமும் கடலும் ஒன்றாகமாட்டாவன்றோ? ஆனதால் இவ்விதம் பொருள் கொள்ளுவது உசிதமாகத்தோன்றவில்லை. நோயுள்ளவனை 'நோயாளன்' அல்லது 'நோயாளி' என்றும், இரப்பவனை 'இரப்பாளன்' அல்லது 'இரப்பாளி' என்றும், தலைவனை 'தலையாளன்' அல்லது 'தலையாளி' என்றும், காட்டில் வசிப்பவனை 'காட்டாளன்' என்றும் வழங்குவதுபோல மலைகளையுடைய நாட்டில் இருப்பவனை 'மலையாளன்' அல்லது 'மலையாளி' என்று சொல்லுவது உசிதமாகத் தோன்றலாம்.*

* இது போற் பொருளுரைக்கக்கூடிய சொற்கள் ஆவன—(1) கலையிலங்குமொழியாளர் (2) பேராயிரமுடையபேராளன் (3) தண்குடந்தை நகராளன் (4) உருவாளன் (5) திருவாளன்.

இவ்விதம் பொருளுரைப்பதற்கு அத்தாட்சியாகத் திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய ஓர்பாட்டு ஈண்டு எடுத்தெழுதப்படுகிறது.

> கலையாளாவகலல்குல்கனவளையும்கையாளாவென்செய்கேன்நான்
> விலையாளாவடியேனைவேண்டுதியோவேண்டாயோவென்னும்மெய்ய
> மலையாளன்வானவர்தம்தலையாளன்மராமரமேழெய்தவென்றிச்
> சிலையாளன்என்மகளைச்செய்தனகள்எங்ஙனம்நான்சிந்திக்கேனே."

இப்பாட்டடிகளில் 'மெய்யமலையாளன்' 'தலையாளன்' 'சிலையாளன்' முதலிய சொற்கள் சிந்திக்கத்தக்கன. விலைக்குக்கொண்ட அடிமையை 'விலையாளன்' என்றும் திருமெய்யமென்னும் மலையில் எழுந்தருளிய தேவனை 'மெய்யமலையாளன்' என்றும், வானவருக்கு முதல்வனானவனை 'வானவர்தம்தலையாளன்' என்றும் வெற்றியுள்ள சிலையையாளுபவனை 'வெற்றிச்சிலையாளன்' என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்பாட்டடியில் 'மலையாளன்' என்னும் பேர் நேரிற்காணப்படுவதால் அது அத்தேசத்தாருக்குப் பெயரென்று விளங்குகிறது.

இன்றும் 'கொல்லிமலை' முதலிய உள்நாட்டுமலைகளிற் குடிகொண்டிருக்கும் ஜனங்கள் 'மலையாளிகள்' என்றே வழங்கப்பட்டுவருகிறார்கள். அவ்விடத்தில் மலைகளைத்தவிர மற்றொன்றும் இல்லாதது இங்குக் கவனிக்கத்தக்கது. ஆனால் மலையாளம் என்ற சொற்கு மலையாளிகள் குடியிருக்கும் இடமென்றும், அவருடைய பாஷையென்றும், கூறும் பொருள், வெகுகாலம் சென்றபின்னர் வந்திருக்கக்கூடுமென்பது சிலரது கொள்கை.

மேற்குக்கடலுடன் சமமாய்ச்சேர்ந்துகிடக்கும் மலையாளத்தைக் கடைச்சங்கநூல்களிலும் சிலாசாஸனங்களிலும் 'மலைநாடு'* என்றுகூறியிருப்பதும் தவிர, அது தமிழ்நாடுகளில் ஒன்றாயும் கணிக்கப்பட்டிருக்கின்றது. 'புதைத்தல் போர்த்தல்' 'இதுமலைநாட்டுவழக்கு' என்று சிலப்பதிகார உரையிலும், 'போகட்டே என்றுமாம்' 'அதுமலைநாட்டு வழக்கு' என்று ஜீவகசிந்தாமணி உரையிலும், 'மலைநாட்டுச்சடையன் கருணன்தன்மேல் பழைபொய்' என்று கழுகுமலைச்சிலாசாஸனத்திலும், 'ராஜாதித்ததேவர் பெரும்பழைநாயகர் மலைநாட்டு நந்திக்கரைப்புத்துவர்' என்று மற்றொரு சாஸனத்திலும், 'தென்மதுராபுரித்திருவிளையாட்டத்தில் கண்டு மன்னரெல்லாம் வந்திறைஞ்ச மலைநாடு கொண்டருளி' என்று சுசீந்திரம் சாஸனத்திலும், 'மலைமண்டலத்துத் திருவிதாங்கோட்டு இரவிவன்மராய குலசேகரப்பெருமாள்' என்று திருவிதாங்கோட்டுச் சாஸனத்திலும், 'மலைநாட்டுத்திவ்விய தேசங்கள்' என்று ஸ்ரீவைஷ்ணவ நூல்களிலும் இப்பதம் பிரயோகிக்கப்பட்டிருப்பது காணற்பாலது.

---

* சேக்கிழாருடைய பெரியபுராணத்தில் சேரமான்பெருமாள்நாயனார் சரித்திரத்தில் சேரவரசரின் நாட்டையும் தலைநகரையும்பற்றி இவ்விதம் காணப்படுகின்றது.

"மாவீற்றிருந்தபெருஞ்சிறப்பின்மன்னுந்தொன்மைமலைநாட்டுப்
பாவீற்றிருந்தபல்புகழார்பயிலுமியல்பிற்பழம்பதிதான்
சேவீற்றிருந்தார்திருவஞ்சைக்களமுநிலவிச்சேரர்குலக்
கோவீற்றிருந்துமுறைபுரியுங்குலக்கோமூதூர்கொடுங்கோளூர்"

பிறகு நாளடைவில் விஜயநகர அரசரின் காலத்தில் 'மலையாளம்' என்னும் சொல் நேரில் உபயோகத்தில் வந்துவிட்டது*

இம்மலைநாடு, தமிழ்நாடுகளில் ஒன்றென்று பழைய தமிழ்நூல்களிற் சொல்லப்பட்டுளது. அந்நாட்டின் எல்லையை வரையறுத்துச் சொல்லும்பொழுது,

"வடவேங்கடம்தென்குமரியாயிடைத்-தமிழ்கூறுநல்லுலகம்"

என்று பனம்பாரனாரும்,

"நெடியோன்குன்றமும்தொடியோள்பௌவமும்
தமிழ்வரம்பறுத்ததண்புனனாட்டு"

என்று இளங்கோவடிகளும்,

"வடதிசைமருங்கின்வடுகுவரம்பாகத்
தென்றிசையுள்ளிட்டெஞ்சியமூன்றும்
வரைமருள்புணரியொடுகரைபொருதுகிடந்த
நாட்டியல்வழக்கநான்மையில்கடைக்கண்
யாப்பினதிலக்கணமறைகுவன் முறையே"

என்று காக்கைபாடினியாரும், கூறியிருக்கின்றனர்.

இதனால் தமிழ்நாட்டின் எல்லை வடக்குத் திருமால் சயித்தருளும் வேங்கடமலையும், தெற்குக் கன்னியாகுமரியும், மேற்கும் கிழக்கும் கடலுமாம் என்று விளங்குகிறது. இவ்வெல்லையில் மலையாளமும் உட்பட்டிருக்கின்றது.

தொல்காப்பியத்தில் மலையாளர் மொழிந்துவரும் பாஷையில் திசைச்சொற்கள், அதாவது தேசசம்பந்தமான சிற்சிலபேதங்கள் வந்திருப்பதாகவும் அவைபின்னவெல்லாமென்றும் காணப்படுகின்றது.

---

*"காஶீவாஸஸ்யயாத்ராதஸ்ய நேத்ராஹ ।
தத்ரம்ராயா: தக்ஷிணகாதௌ மலையாளதேசாஹ ॥

ஶ்ரீமத் தத்ரமஹாராஜாதக்ஷிணகாஶவாதீய ஹஜ்ய கம் ஸம்ராஜ்யவாஸி ஶ்ரீவாதம்கஜ மலையாளதேஶ விஶ்வநாயதேவா ஶ்ரீ வாணவிம்தகே."

"செந்தமிழ்சேர்ந்தபன்னிருநிலத்தும்
தங்குறிப்பினவேதிசைச்சொல்......"

என்னும் சூத்திரத்தின் உரையில் உரையாசிரியர் ஆகிய சேனாவரையர் திசைச்சொற்கள் வழங்கும் பன்னிரண்டு நாடுகளையும் திட்டம் செய்யும் பொழுது மலைநாட்டினையும் உட்படுத்தியிருக்கின்றனர். இதனால், சேனாவரையரது காலத்தில் பாண்டியநாட்டின்கண் உபயோகித்துவந் திருந்த தமிழ்மட்டுமே சுத்தமாயிருந்ததெனச் சொல்லக்கூடும். சேர சோழதேசங்களில் அது தேசசம்பந்தமான பேதங்களையுடைத்தாயிருந் தது. 'முடிகெழுவேந்தர் மூவருடைய நாட்டிலும் இருந்த ஆசிரியர் களின் கவிகளை இப்பொழுது நாம் கடைச்சங்கக்கவிகள் என்று ஆதரித்து வருகிறோம். சிலப்பதிகாரம் முதலிய நூல்களை இயற்றி யோர் மலைநாட்டுக்கவிகள் என்று அவர்கள் செந்தமிழ்வர்க்கத்தில்நின்றும் தள்ளப்படவில்லை.

மலையாளம் தமிழகத்திற் காணப்படுவதால், அத்தேசத்திலுள்ள வர் தமிழ்மொழியை வழக்கில் கொண்டுவந்திருந்தவர் என்றும், தமிழ ருடைய பழக்கவழக்கங்களையெல்லாம் கைக்கொண்டிருந்தவர் என்றும், தெரியக்கிடக்கின்றது. இவ்விதம் ஆலோசித்துவரும்பொழுது மலை யாளிகள் தமிழரில் நின்றும் பேதப்பட்ட ஜனங்கள் அல்லரென்பதும், ஆயின், பண்டைக்காலத்திலுள்ள தமிழர்தான் என்பதும், அவரது பாஷை தமிழினது மகளோ சோதரியோ என்னும் ஐயங்கள் அகன்று சுத்தரூபத்தையுடைய தமிழ்தான் என்பதும் விளங்கக்கூடும்.

## பாஷை

ஒரு நாட்டையடக்கி ஆளும் அரசன் எத்தேசத்தவனுயினும் எந்த பாஷையை வழங்கிவந்தாலும், அந்நாட்டிலுள்ள பாஷையை உபேக்ஷிப் பதில்லை. சோழமன்னர் தென்பாண்டிநாட்டைக்கீழ்ப்படுத்தி அவரது வெற்றிக்கு அடையாளமாகிய சாஸனங்களைப் பொறிக்கும் தருணம் அந்நாட்டில் வழக்கமுற்றிருக்கும் வட்டெழுத்தையன்றித் தமிழக்கரங் களை உபயோகித்தவரல்லர். விஜயநகரவரசர் தென்திசை முழுவதும் கீழ்ப்படுத்திச் சாஸனங்கள் வரையும்பொழுது, அவர் வழக்கமாகச்

சாஸனங்கள் எழுதுவது வடமொழியிலாயினும், நிலங்களுடைய எல்லையும் மற்றும் கூறும்பொழுது 'ஊ-பிரோவிமிவ்யெதெ தெஸ ஹாஷயா' (நாட்டுப்பாஷையில் எல்லை சொல்லப்படுகிறது) என்று அந்தந்த விடங்களிலுள்ள பாஷையை யுபயோகித்துவந்தனர். இதுபோலவே பாண்டியமன்னரும் நாட்டுநடவடிக்கைகளை நாட்டுப்பாஷையில் எழுதக்கூடாதென்று தடுக்கவில்லை. இதனால் ஓர்நாட்டிற் காணக்கூடிய சிலாசாஸனங்களும் செப்புப்பட்டயங்களும் அந்நாட்டுப்பாஷையில் தான் காணப்படவேண்டுமென்பது விளங்கிற்று. ஆனதால் மலையாளநாட்டிலுள்ள சாஸனங்கள் எந்தமொழியிற் காணப்படுகின்றனவென்று சிந்திப்போமாக—

மலைநாட்டின்கண் இதுகாறும் கண்டுபிடிக்கப்பட்ட சாஸனங்களில் சில முழுதும் தமிழாகவும் சில தமிழ் நிறைந்ததாகவும், சில முக்காற்பாகம் தமிழாகவும், கால்பாகம் மலையாளமாகவும் மற்றும் சில தனி மலையாளம் என்றுசொல்லக்கூடியதாகவும் இருக்கின்றன. நாளடைவில் தமிழ்மொழி மலையாள உருவமாக ஆவது இச்சாஸனங்களில் நின்றும் அவற்றின்காலங்களில் நின்றும் தெரியவருகிறது. தமிழ்ப்பாஷை தேசபேதம் கொண்டும் மற்றும் மலையாளமாய்த்தீர்ந்ததென்றும் சிலர் கூறுவதுண்டு.

இது மலையாளத்தைப்பற்றிய ஓர் செய்யுள்—

"மலையாளிகளிடையாயொருமலையாளமிதுதகம்
மலர்கொண்டிவிகுடிகொண்டொருதரணீஸுரருளாம்
மணிஸம்ஸ்கிருதமணியும்தளிர்மொழியும்பரிமிளிதம்
மலையாளமிதொருவாணியுமுளவாயொருஸரஸம்"

**வித்தியாபூஷணவெங்கடராமசர்மா,**

Pandit, English High School, Chenganur,
Travancore.

18 DEC 1924
SHIYALI

ஸ்ரீ:

# புத்தகமதிப்புரை.

க. அதிகமான் நெடுமான் அஞ்சி :—இது, பழந்தமிழ்ப்பெருமக்கள்வரலாறு என்னுந் தொகுதியின் முதலாவது இலக்கமுடையதாக இலக்கணவிளக்கபரம்பரை ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகரவர்களால் எழுதி அச்சிடப்பட்டிருக்கிறது. இதில், அதிகமான் நெடுமானஞ்சியின் கல்வி நிலை, வீரம், கொடைத்திறன் முதலிய குணங்கள் மேற்கோள் கொண்டு விளக்கிக்காட்டப்பட்டுள்ளன. இவ்வரலாற்றைத் தேசிகரவர்கள் எழுதிவரத் தொடங்கியிருப்பதானது அவர்களது கல்வித்திறமையோடு தமிழபிமானத்தையும் குலப்பெருமையையும் காட்டத்தக்கதாயிருக்கிறது. இதன் விலை முதலியன ஆக்கியோர்க்கெழுதித் தெரிக.

உ. ஆத்திரேயன் பேராசிரியன் அருளிய தொல்காப்பியப் பொதுப்பாயிரம் மூலமும் உரையும் :— இது, கும்பகோணம் வாணாதுறை ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் திருப்புறம்பயம் ஸ்ரீமத். வை. சதாசிவபண்டாரத்தாரவர்களாற் பரிசோதிக்கப்பட்டு, ஸ்ரீமத். சோ சிவானந்தம்பிள்ளையவர்களால் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா நான்கு. வேண்டுவோர் T. S. சிவாநந்தம்பிள்ளை, பாப்பு நாயக்கன்தெரு, கும்பகோணம் என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

ங. இங்கிலாந்திற் கூட்டுறவு இயக்கம் :—இது, கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். ஊ. சா. வேங்கடராமையரவர்களால் எழுதப்பட்டது. பொருணெறியுடையோராற் போற்றத்தக்கது. இதனாற் கூட்டுறவின் இயல்பும் இயக்கமும் பயனும் தெளிவாயறியத்தகும். இதன் விலை அணா எட்டு. வேண்டுவோர் ஆக்கியோர்க்கு எழுதிப் பெறலாம்.